www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu


நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

JANASAKTHI WEEKLY மக்கள் வார இதழ்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு 26 ஆவது மாநில மாநாடு 2025 ஆகஸ்ட் 15 16 17 18 சேலம்

மலர் 88 இதழ் 18 | 2025 ஆகஸ்ட் 03 - ஆகஸ்ட் 09 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15

# காலம் தோறும் கம்யூனிஸ்டுகள்

## எழுச்சிமிகு நூல் வெளியீட்டு விழா



**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டையொட்டி "காலம் தோறும் கம்யூனிஸ்டுகள்" நூல் வெளியீட்டு விழா ஜூலை 28ஆம் தேதி சென்னையில் எழுச்சியுடன் நடைபெற்றது.**

தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய வெளியீட்டு விழாவுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா தலைமை தாங்கினார். நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

உடல்நலப் பாதிப்பால் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்க இயலாததால், அவருக்குப் பதிலாக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு கலந்துகொண்டு நூல்களை வெளியிட்டார். முதல் தொகுதியை தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரும், இரண்டாம் தொகுதியை கவிப்பேரரசு வைரமுத்துவும் பெற்றுக்கொண்டனர். முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசனிடம் அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.

பின்னர் அமைச்சர் தங்கம் தென்னரசு, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், கவிப்பேரரசு வைரமுத்து ஆகியோர் உரையாற்றினர். மார்க்சிஸ்ட்

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

**மு.க. ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

25.07.2025

**வாழ்த்து**

கவிஞர் திரு. ஜீவபாரதி அவர்கள் எழுதியுள்ள "காலங்கள்தோறும் கம்யூனிஸ்டுகள்" என்ற நூலின் வெளியீட்டு விழாவில் பங்கேற்க வேண்டும் என்று தோழர் திரு. முத்தரசன் அவர்கள் தேதி கேட்டபோது, "தங்களுக்கு இல்லாத தேதியா?" என்று கூறி உடனடியாக நிகழ்ச்சிக்கு வர ஒப்புதல் அளித்தேன். ஆனால், மருத்துவர்கள் அறிவுறுத்தலின்படி சிறப்பான இந்த நிகழ்ச்சியில் பங்கெடுக்க இயலவில்லை என்பது வருத்தமளிக்கிறது.

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்



கட்சிக் கடிதம்

# எங்கெங்கு காணினும் செங்கொடியே!



மாநில மாநாட்டை நோக்கி... 7

போர்க்குணமிக்க தோழர்களே!

**மாநில மாநாடு தொடங்குவதற்கு ஓரிரு வாரங்களே உள்ளன. மாநாட்டில் முன்வைக்கப்படும் மூன்று முக்கிய அறிக்கைகளான அரசியல் அறிக்கை, அமைப்பு நிலை அறிக்கை, செயல்பாட்டு அறிக்கை ஆகியவை செயற்குழு, நிர்வாகக் குழு, மாநிலக்குழு கூட்டங்களில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.**

இவை மாநாட்டில் முன்வைக்கப்படும். மாநிலம் முழுவதிலிருந்தும், மாவட்ட மாநாடுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், மாநில மாநாட்டில் பங்கேற்று விவாதித்துப் பின்னர் நிறைவேற்றப்படும்.

அரசியல் பேச வேண்டாம், தத்துவம் பேச வேண்டாம் என்று ஒருவர் தமிழ்நாட்டில் வலம் வருவதை அறிவீர்கள். அரசியலற்ற, தத்துவமற்ற அரசியல் தலைவர் ஒருவர் இருப்பது அதிசயமல்ல. எதுவும் வேண்டாம், எவர் தயவும் வேண்டாம், ஒரே ஒருவர் தயவு இருந்தால் போதும், தான் தப்பித்துத் தலைசாய்த்துப் படுத்துறங்கலாம் என நினைக்கிறார். அவர் அரசியலில் ஜெயிப்பது முக்கியமல்ல, அவர் தன்னைத் தற்காத்துக் கொள்ள வேண்டும். இதைத் தவிர அவருக்கு வேறொன்றும் லட்சியம் அல்ல.

லட்சியம் இருந்தால் தானே கவலைப்பட வேண்டும். லட்சியம் இல்லை. கொள்கை இல்லை. தத்துவம் இல்லை. பின்னர் ஏன் அரசியல்? இவை எதுவுமின்றி தன்னைத் தற்காத்துக் கொள்வது மட்டுமே லட்சியம். அழையா விருந்தாளியாகச் சென்று விமான நிலைய வாசலில் தவம் கிடந்து காத்திருந்து சந்தித்தார்.

பிரதான எதிர்க்கட்சித் தலைவர், கூட்டணியின் தலைவரை மூன்று நிமிடங்கள் அறையில் வைத்து சந்தித்துப் பேசக்கூடத் தகுதியற்றவராகி விட்டாரா எதிர்க்கட்சித் தலைவர்?

வாயிலில் நின்று செயற்கையான சிரிப்போடு மலர்க் கொத்து கொடுத்து மனம் மகிழ்ந்து போய்விட்டார்!

வெறுமனே சந்திக்கக் கூடாது என்று மலர்க் கொத்தோடு, சில கோரிக்கை அடங்கிய மனுவையும் அளித்து மகிழ்ந்துள்ளார். காது குத்துவதற்கும் அளவில்லையா? தமிழ்நாட்டு மக்களுக்கு, சிறு வயது குழந்தைகளாக இருந்தபோதே பெற்றோர்கள் காது குத்தி விட்டார்கள்.

தற்போது புதிதாக இவர் காது குத்துகிறார்! இவரது காது குத்தலைப் பார்த்துத் தொண்டர்கள் முகம் சுளிக்கின்றனர். நாம் தானைத் தலைவர் என்று நினைத்துக் கொண்டுள்ளோம். ஆனால் அவரோ தொடர்ந்து அவமானப்படுத்தப்படுகின்றாரே, இப்படி நம் கட்சியை, தலைவரை அவமானப்படுத்துவோரை நம்பி நாம் போகத்தான் வேண்டுமா? எனப் புலம்புகிறார்கள். பாவம் அவர்கள் என்ன செய்வார்கள்?

நயவஞ்சகம் நிறைந்த தலைவரை நம்பிப் போகலாமா? என்று கேள்வி மேல் கேள்வி எழத்தான் செய்கின்றது. ஆனாலும் தலைவர் எந்த நம்பிக்கையில் உள்ளார்?

தேர்தல் ஆணையத்தின் பல் பிடுங்கப்பட்டு விட்டது. குரங்காட்டி குரங்கை ஆட்டுவிப்பது போல் ஒன்றிய அரசு தேர்தல் ஆணையத்தை ஆட்டி வைக்கின்றது. தேர்தல் ஆணையமும் ஆடுகின்றது. தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை நம்பகமானது அல்ல; ஆதார் அட்டை நம்பகமானது அல்ல; குடும்ப அட்டை (ரேஷன் கார்டு) நம்பகமானது அல்ல. இவற்றை எல்லாம் போலியாகத் தயாரிக்க முடியும் என்று எங்கோ அல்ல, உச்சநீதிமன்றத்தில் உரக்கச் சொல்கின்றது தேர்தல் ஆணையம்!

தேர்தல் ஆணையம் என்பது அரசியல் அமைப்புச் சட்டத்தால் அமைக்கப்பட்ட அமைப்பாகும். எவருடைய கட்டளைக்கும் காத்திருக்காமல் சுதந்திரமாகச் செயல்பட வேண்டிய மிக உயர்ந்த அமைப்பு.

உயரிய நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கட்டிக் காக்க வேண்டிய உன்னதமான அமைப்பு! அத்தகைய அமைப்பின் அதிகாரத்தை அடியோடு ஆர்.எஸ்.எஸ் கும்பல் அகற்றிவிட்டது.

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் கொண்ட குழு தேர்தல் ஆணைய உறுப்பினர்களைப் பரிந்துரை செய்யும் என்று இருந்தது. இதை மோசடிக்கார மோடி அரசு முற்றிலும் மாற்றி அமைத்து விட்டது. உச்சநீதிமன்ற நீதிபதியை அகற்றிவிட்டு பிரதமர், பிரதமரால் நியமனம் செய்யக்கூடிய ஒன்றிய அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் கொண்ட மூவர் குழு கூடி பெரும்பான்மைக் கருத்தின் அடிப்படையில் முடிவெடுக்கும் என்று முடிவு செய்து விட்டார்கள்.

பெரும்பான்மை யார்? மூவரில் இருவர். அவ்விருவர் யார்? ஒருவர் பிரதமர் மோடி மற்றொருவர் அவரின் கூட்டாளி அமித்ஷா!

இவர்கள் இருவரும் என்ன விரும்புகின்றார்களோ அதுதான் முடிவு. அவர்களுடைய விருப்பத்தின் அடிப்படையில் தேர்தல் ஆணைய உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். இதுதான் மோடியின் ஜனநாயகம்.

இத்தகைய ஜனநாயகம் பின்பற்றப்பட்டால் நாட்டின் எதிர்காலம் என்னாகும்? ஜனநாயகத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்குத் துரோகம் இழைக்கும் செயல் அல்லவா? இத்தகைய துரோகத்திற்குத் துணை போகலாமா?

வாக்காளர்களுக்குத் துரோகம் இழைத்து, ஆர்.எஸ்.எஸ் கும்பலின் ஆதரவாளர்களை வாக்காளர் பட்டியலில் இடம்பெறச் செய்வது, மற்றவர்களின் பெயர்களை நீக்கம் செய்து விடுவது!

மோடிக் கும்பலின் இந்த சதிச் செயலை செயல்படுத்தும் அமைப்பாக தேர்தல் ஆணையம் மாற்றப்பட்டிருப்பது கவலைக்குரியது அல்லவா?

இந்தப் பாசிச நயவஞ்சகத்தை நன்கு அறிந்த பின்பும், பேருந்தில், வேனில் நின்று சிரிக்கச் சிரிக்க பிரச்சாரம் செய்ய இயலுமா?

ஆர்.எஸ்.எஸ் எதனை நோக்கி மெல்ல மெல்ல காய் நகர்த்தி வருகின்றது? எந்தக் கட்சியும் இல்லாத ஒரு கட்சி ஆட்சி முறையை, ஒரு நபரின் ஆட்சி முறையை, பாசிசத்தை அமல்படுத்திட முயல்கிறது அல்லவா?

இது நாட்டிற்குப் பேராபத்து அல்லவா? பேராபத்தைத் தடுத்து நிறுத்திட வேண்டாமா? நாட்டைப் பற்றிக் கவலையில்லை, ஜனநாயகத்தைப் பற்றிக் கவலையில்லை எனில் பின் எதற்காக அரசியல் கட்சி? பின்னர் எதற்காக தலைவர் பட்டம்? 'வெந்ததைத் தின்று, விதி வந்தால் சாவோம்' என்றால் அது மானங்கெட்ட பிழைப்பு அரசியல் அல்லவா?

தோழர்களே நாம் எத்தகைய அரசியல் தலைவர்களையும் தனிப்பட்ட முறையில் தரம் தாழ்ந்து விமர்சிப்பது இல்லை.



ஒருமையில் பேசும் பழக்கமும் இல்லை, அதற்கான அவசியமும் இல்லை!

ஓர் அரசியல் கட்சியை ஆதரிப்பதும் எதிர்ப்பதும் அரசியலை மையப்படுத்தித்தான் என்பது நம்மைப் பற்றி அறிந்தோர் நன்கு அறிவார்கள்.

அரசியலற்ற முறையில், புழுதி வாரித் தூற்றுவதன் மூலம் நம்மை எந்தக் கொம்பராலும் தகர்த்து விட முடியாது!

நம்மைத் தகர்க்க நினைத்தவர்கள் ஏராளம், ஏராளம். அவர்கள் எல்லாம் இன்று எங்கே போனார்கள் என்று எவருக்கும் தெரியாது! இருக்குமிடம் தெரியாமல் போனதுதான் வரலாற்று உண்மை.

நூறு ஆண்டுகாலம் கடந்து வந்திருக்கின்றோம். அடி சறுக்காமல், கம்பீரமாக எழுந்து நிற்கின்றோம் என்றால் என்ன காரணம்? நாம் ஏற்றுக்கொண்ட மகத்தான மார்க்சியம் என்கிற தத்துவம்! சோசலிசமே எம் லட்சியம், அதனை அடைவதற்கு எத்தகைய தியாகத்தையும் செய்வோம்! செய்து கொண்டே இருப்போம்!

அத்தகைய தியாகச் சீலர்களின் வரலாற்றை எடுத்துக் கூறும் நன்னூல்தான் 'காலம் தோறும் கம்யூனிஸ்டுகள்' எனும் வரலாற்றுச் சிறப்புமிக்கதோர் நூலாகும்!

காலம் காலமாகப் பயன்படக்கூடிய அரிய அற்புத பொக்கிஷமாகும்! தோழர்களே நாம் சேலத்தில் கூடுவது

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்



**ஆகஸ்ட் 15, 16, 17, 18 சேலத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது தமிழ்நாடு மாநில மாநாடு!**


மே.து.ரா.

# சோழன் ராசேந்திரன் விழா
# முதல்வரின் ஆக்கமும் பிரதமரின் ஆன்மீகமும்



**சோழப் பேரரசின் பெருமைகளை நிலைநாட்டித் தனக்கெனத் தனியிடத்தைப் பெற்றுக்கொண்டவன் பேரரசன் முதலாம் ராசேந்திரன் (1014 –1044). தென்னகம் முழுதுமன்றி, கங்கைக்கு அப்பால், ஈழம், மாலத்தீவுகள், மலேசியா, தென்கிழக்கு ஆசியாவில் கடாரம் வரை சென்று வெற்றிக் கொடி நாட்டியவன் அவன்.**

நீர் மேலாண்மை, உற்பத்திப் பெருக்கம், கட்டிட நுட்பம், கலை வளர்ச்சி, ஆட்சித் திறன், படை வலிமை எனப் பல முனைகளிலும் மேன்மை கொண்டிருந்த காலம் அது.

முதலாம் ராசேந்திரனின் பிறந்தநாள் விழா, கங்கைகொண்ட சோழபுரம் கோயில் கட்டத் தொடங்கிய ஆயிரமாவது ஆண்டு விழா, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் படையெடுப்பு நிறைவின் ஆயிரமாவது ஆண்டின் நிறைவு விழா என முப்பெரும் நிகழ்வுகள் இந்த ஆண்டில் இணைகின்றன.

இந்த நிகழ்வுகள், தலைமை அமைச்சர் மோடி பங்கெடுப்புடன் முப்பெரும் விழாக்களாக ஒன்றிய அரசின் பண்பாட்டுத் துறை சார்பில் கொண்டாடப்பட்டன. ஆடித் திருவாதிரை நாள் வழிபாடும் இவற்றுடன் இணைந்துகொண்டது.

முதலாம் ராசேந்திரனது பிறந்த நாளினை 2021ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு அரசு விழாவாகக் கொண்டாடிவருகிறது.

தமிழகத்துக்குச் சிறப்புச் சேர்த்த பேரரசன் ஒருவனை நினைத்துப் போற்றுவதும் விழாக்களை நடத்துவதும் மன நிறைவு தருகிறது.

தமிழ்நாடு அரசு இந்த ஆண்டு நடத்திய விழாவில், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகள், அவர்களது கலை நிகழ்வுகள், முதலாம் ராசேந்திரன் வரலாற்றுக் குறும்படம், தென்னாட்டுப் பெருவேந்தன் நாட்டிய நாடகம், இசை, நடனங்கள், சோழர் பற்றிய பட்டிமன்றம், ராசேந்திரன் நாடகம் எனப் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

### முதல்வரின் ஆக்க அறிவிப்புகள்

அனைத்துக்கும் மேலாக, தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சில ஆக்க அளவிலான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

சோழப்பேரரசின் சிறப்புகளை வெளிப்படுத்தும் அருங்காட்சியகம், சோழகங்கம் ஏரியைப் பலப்படுத்துதல், கால்வாய்களைச் சீரமைத்தல் உள்ளிட்ட 10 வகையான பணிகள் 50 கோடி ருபாய்க்கும் அதிகச்செலவில் மேற்கொள்ளப்படுகின்றன. முதலாம் ராசேந்திரனது விழா தொடர்பாகத் தமிழ்நாட்டு முதல்வரின் அறிவிப்புகள் அனைத்தும் மக்களுக்குப் பயன் தரும் வகையில் அமைந்திருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

### ஆன்மீகத்தில் ஒன்றிய அரசு

இதற்கு நேர் மாறாக, ஒன்றிய அரசு முழுமையானதொரு ஆன்மீக நிகழ்வினை முன்னெடுத்துள்ளது. ஆயிரம் ரூபாய்க்கான காசு வெளியீடு மட்டுமே விலக்கு எனலாம்.

நடைமுறையில் புழங்குவதற்கு அல்லாமல், தமிழ் எழுத்துக்கள் இடம்பெறாத ஆயிரம் ரூபாய்க்கான சிறப்புக் காசு வெளியிடப்பட்டுள்ளது.

வாரணாசியிலிருந்து பிரதமர் மோடி கொண்டுவந்த கங்கை நீர் சோழகங்க ஏரியில் ஊற்றப்பட்டு, பெருவுடையார் திருவுருவின் மேலும் தெளிக்கப்பட்டுள்ளது.

இசைஞானி இளையராசா அவர்கள், திருவாசகம் சிம்பொனி, ஓம் சிவோம் பாடல், ‘நமச்சிவாய வாழ்க’ உள்ளிட்ட தேவார, திருவாசகப் பாடல்கள் ஆகியவற்றைப் பாடியுள்ளார். சோழர் பெருமைகளைப் பாடவில்லை

இருபத்தைந்து சைவ மடத் தலைவர்கள் மோடியை வரவேற்க, நாற்பது ஓதுவார்கள் இசைபாட.

வடமொழி வேதங்கள் முழங்கிய வரவேற்பினையும் பிரதமர் ஏற்றுக்கொண்டார். பெருவுடையார் கோயிலில் வடமொழிப் பாடல்களை ஓதி நடத்தப்பட்ட வழிபாட்டு முறைமையில் திருவுடையாரைப் பிரதமர் தொழுதார்.

கங்கை கொண்ட சோழபுரம் கோயிலில் ஆடித் திருவாதிரை வழிபாட்டினைப் பிரதமர் மோடி மேற்கொண்டார். மாற்றவே முடியாது என அவர்கள் கூறும் ஆகம முறைமைகளுக்கு ‘முற்றிலும் மாறாக’ வழிபாட்டினை நடத்தும் ‘அர்ச்சகர்’ நடத்தவேண்டிய விளக்கேற்றிய வழிபாட்டுத் தட்டினை ஏந்திச் செய்யும் நடைமுறையை மோடியே செய்தார்.

பகவத் கீதையின் தமிழ் வடிவப் பாடல்கள் அடங்கிய தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது.

### உண்மையை மறைக்கும் பிரதமர்

சோழர்களின் நீர் மேலாண்மை, படை வலிமை, பொருளிய மேன்மை, கலைச் சிறப்பு என்பன போன்ற சில பாராட்டுரைகள் பிரதமர் உரையில் உள்ளடங்கியிருந்தாலும், பிற கருத்துகள் அனைத்தும் பாரதப் பண்பாடு, தென் வட சமய இணைவு, ஆன்மீகப் போக்குகள் எனச் சோழப் பேரரசின் நோக்கங்களுக்கும் உண்மைகளுக்கும் பெரிதும் மாறானவையாகவே இருந்தன என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

காசியிலிருந்து கங்கை ‘நன்னீரை’க் கொண்டு வந்து காவிரி நீருள்ள ஏரியில் கலக்கச் செய்வதால், தமிழர்களுக்கு எதை உணர்த்துகிறார் மோடி?

கங்கை நீர் உன்னதமானது, கடவுள் தன்மை கொண்டது எனக் காட்டி, அதைக் காவிரியில் கலப்பதால் காவிரிக்குச் சிறப்புச் சேர்வதாகக் காட்ட மோடி முயற்சிக்கிறார். கங்கைகொண்ட சோழபுரத்தில் நடைபெறும் முதலாம் ராசேந்திரனின் விழாவினைக் கங்கை நீருக்கு எடுக்கப்படும் விழாவாகக் கட்டமைக்க மோடி நினைக்கிறார்.

### தமிழர் – சோழர் பண்பாட்டை ஒடுக்க நினைக்கும் மோடி

தமிழரின் பெருமை, சோழப் பேரரசர்களின் சிறப்பு ஆகியவற்றைப் பற்றிப் பேசிய மோடி, தமிழ்ப் பண்பாடு தொடர்புடைய எத்தகைய அறிவிப்பினையும் வெளியிடவில்லை. தமிழ் மக்கள் நலனுக்கான திட்டங்களையும் அறிவிக்கவில்லை.

தமிழரின் தொன்மையை நிலைநாட்டிய கீழடி அகழ்வுகள் குறித்தோ, அவற்றின் வழியாகப் பெற்ற பண்டைச் சிறப்புகள் பற்றியோ மோடி வாய் திறக்கவில்லை.

### கங்கை கொண்டது வெற்றியின் அடையாளம்

**கங்கை நீரை நன்னீராகவோ சிறப்புக் கொண்ட நீராகவோ கருதி முதலாம் ராசேந்திரன் குடங்களில் கொண்டு வரவில்லை. கங்கை வரை உள்ள பல நாடுகளை வென்று, அடிபணியச் செய்ததற்கான அடையாளமாகவே கங்கை நீர் கொண்டுவரப்பட்டுள்ளது.**

கங்கையில் உள்ள நாடுகளை வெற்றி கொண்டான் என்னும் பொருளில் ‘கங்கைகொண்டான்’ என்று அழைக்கப்படுவதே இதனை உறுதி செய்கிறது. ‘கொண்டான்’ என்னும் சொல் வெற்றியைக் குறிக்கிறது.

முதலாம் ராசராசனும் முதலாம் ராசேந்திரனும் பாரத நாட்டின் அடையாளங்கள் என்றும், சோழப் பெருநாட்டின் காலகட்டம் பாரதத்தின் பொற்காலம் என்றும், சோழ மன்னர்கள் பாரதத்தைப் பண்பாட்டு ஒற்றுமை என்ற இழை கொண்டு இணைத்தனர் என்றும் மோடி பேசியிருக்கிறார்.

### தென்னாடுடைய சிவன் வேறு

அத்துடன், சைவ வழிமுறைக்கும் இந்திய ஒன்றியத்தின் கட்டமைப்புக்குமான பங்களிப்பாக இதனை எடுத்துக்காட்டுகிறார்.

தமிழர்களின் சைவம், எப்போதும் ஒன்றியத்தின் பிற பகுதி நம்பிக்கைகளோடு தன்னை இணைத்துக் காட்டிக்கொண்டதில்லை என்பதை மறைக்க மோடி முயல்கிறார். ‘தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி’ என்பதுதான் தமிழ்நாட்டில் சைவமாக முன்னிறுத்தப்படுகிறது.

முதலாம் ராசராசன், முதலாம் ராசேந்திரன் ஆகியோர் சைவத்தை இந்த வகையில்தான் பார்த்தனர், பரப்பினர்.

முதலாம் ராசராசன், முதலாம் ராசேந்திரன் மற்றும் பிற சோழப் பேரரசர்கள் சைவர்களாக இருப்பினும், மக்களை வேறுபடுத்திப் பார்க்கவில்லை; பிரித்து ஆட்சி செய்யவில்லை; பிரித்தாலும் சூழ்ச்சி செய்யவில்லை.

இந்திய ஒன்றியத்தில் உள்ள இனங்கள், மொழிகள் யாவற்றின் தனித் தன்மைகளைப் புறக்கணித்து, ஆரிய ஒற்றைத் தன்மையைப் புகுத்த நினைக்கும் சனாதனத்தின் நிலையினை முன்வைத்து, பாரதத்தின் ஒற்றுமை என்ற சிமிழுக்குள் தமிழர்களின் சோழர்களின் பண்பாட்டினை அடக்க முயற்சிக்கிறார் மோடி.

கங்கைக் கரையைத் தாண்டியும், ஈழம், மாலத்தீவு, தென்கிழக்கு ஆசியா வரை சென்றும், பல நாடுகளை வென்ற சோழன் முதலாம் ராசேந்திரன், அந்த நாடுகளை அடிமைப்படுத்தி வைத்திருக்கவில்லை. மாறாக, அவர்களை அடக்கிய நிலையிலும், மீண்டும் ஆட்சி செய்ய அவர்களையே ஏற்பாடு செய்து திரும்பினான் என்பதுதான் வரலாறு.

ஆனால், ஆங்கில ஆட்சியின் வல்லாதிக்கத்தில் இணைக்கப்பட்டு, இந்திய ஒன்றியத்தில் இன்று இடம்பெற்றுள்ள பல தேசிய இனங்களை அடக்கி ஆண்ட ஆங்கில வல்லாட்சியின் வழியிலேயே இன்றைய பா.ச.க. அரசு செயல்படுகிறது.

சோழர்களின் வழிகாட்டுதலுக்கு முற்றிலும் புறம்பானதாகவே இது

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

**ஈவு இரக்கமற்ற கொடுங்கோல் மதவெறி மோடி ஆட்சியைப் பதவியில் இருந்து விரட்டி அடிப்போம்!**
**சேலத்தில் செங்கடலென அணி திரள்வோம்!**

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 88 இதழ் 18

# தமிழ்நாட்டின் களங்கமாக ஆணவப் படுகொலைகள்!

கவின் செல்வ கணேஷ், பொறியியல் பட்டதாரி. சென்னை ஐடி நிறுவனத்தில் வேலை. ஆறு இலக்கச் சம்பளம். இருபத்தேழே வயது. பெற்றுக் கல்வி தந்து, கனவுகளோடு வளர்த்து, கை நிறைய சம்பாதிக்கும் வேளையில், துடிக்கத் துடிக்க கழுத்தறுத்துக் கொல்லப்பட்ட மகனின் உடலைப் பார்த்து அந்தக் குடும்பம் எப்படித் தவித்து இருக்கும்!

பட்டியலினத்தில் பிறந்ததால், பள்ளிக்காலத்தில் இருந்து மனமொத்துப் பழகிய பெண்ணைக் காதலித்ததும் கொலைபாதகக் குற்றமானதா? உணர்ச்சிக் பெருக்கில் திடீரென்று நிகழ்ந்தது அல்ல; நன்கு திட்டமிடப்பட்டு நடந்த கொடூரக் கொலை!

பெண்ணின் தாயும் தந்தையும் காவல்துறை அதிகாரிகள். அதிலும் சிறப்புப் படையில் சார்பு ஆய்வாளர்கள். பெற்ற மகளின் விருப்பத்தைச் சிதைக்க, தன் மகனையே கொலையாளியாக்கி, அவனையும் சிறைக்குள் அனுப்பி வாழ்வைக் கருக்குகிற அளவுக்குச் சாதித் திமிர்!

பகுத்தறிவு தமிழ்ச் சமூகம் என்று பேசிக்கொண்டே இருந்தாலும், அதற்கு எதிரான சாதி ஆணவப் படுகொலைகள் நடந்து கொண்டே இருக்கின்றன.

சென்ற மாதம்தான், பட்டியலின இளைஞன் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டதற்காக, அவனது தம்பி கடத்தப்பட்டான். கடத்தும் குற்றத்திற்குத் துணை புரிந்தது, பட்டியலினத்தையே சேர்ந்த ஒரு சட்டப்பேரவை உறுப்பினர்! கடத்தலுக்குத் தன் அலுவலகக் காரைக் கொடுத்து உதவியவர், மிக உயரத்தில் இருக்கும் காவல்துறை அதிகாரியான ஏடிஜிபி!

உயர்நீதிமன்றத்திலும் சாதியச் சதிராடல்! பகுத்தறிவு, சுயமரியாதை, சூழலியல் போராட்டங்களில் முன்னிற்கும் வழக்கறிஞர் வாஞ்சிநாதனைப் பார்த்து, குற்றச்சாட்டு என்னவென்றே தெரிவிக்காமல் பதில் கேட்டு, அதிகாரம் தந்த சகலப் பாதுகாப்புகளையும் பயன்படுத்திக் கொண்டு “நீ எல்லாம் போராளியா, நீ ஒரு கோழை” என்று வசைபாடுகிறார் ‘வீரரான’ ஒரு நீதிபதி!

சாதியின் அடிப்படையில் தொழில் என்பது மறைந்து பல பத்தாண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் மனிதத் தன்மையற்ற கீழ்மைச் செயல்களையே, வீர, தீர, பராக்கிரமமாகப் போதித்து, முடிந்தால் கொலையிலும் பங்கேற்று தலைவன் ஆகலாம்; கொஞ்சம் முயன்றால் சட்டப்பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சராகக் கூட மாறலாம் என்ற அதிகாரப் பசியில் சாதிய வன்மம் உயிர்ப்பிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

சனாதனம், வர்ணாசிரமத்தைப் போற்றிப் புகழ்ந்து, சாதியப் படிநிலையை இறுகச் செய்யும் மதவெறி வகுப்புவாத அரசியல், கார்ப்பரேட்டுகளோடு கைகோர்த்துக்கொண்டு பண மூட்டைகளோடு, அதிகார பலத்தோடு ஆளுமை செலுத்தத் துடிக்கிறது.

தமிழ்நாட்டில் 2017 முதல் 2025 வரை 58 சாதி ஆணவக் கொலைகள் நிகழ்வுகள் நடந்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் ஏழு வழக்குகளில்தான் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

எனவே சாதி ஆணவப் படுகொலைகளைச் செய்தால், எளிதில் தப்பி விடலாம். அல்லது சில ஆண்டுகள் கழித்துச் சிறையில் இருந்து வெளிவந்து விடலாம் என்ற எண்ணம்தான், இந்தக் கொலைச் செயல்களில் ஈடுபட அச்சமற்ற, மனத்திண்மையைக் கொடுக்கிறது.

இதிலிருந்து சமூகத்தை விடுவிக்க வேண்டுமானால், சாதி ஆணவப் படுகொலைத் தடுப்புச் சட்டத்தை இனியும் தாமதிக்காமல் நிறைவேற்ற வேண்டும்.

இன்றைய சூழலில், எதிர்ப்புகளுக்கு இடையே சாதி மறுப்புத் திருமணம் செய்து கொள்பவர்கள், காவல் நிலையங்களையே நாடவேண்டி இருக்கிறது. காவல் நிலையத்தில் உள்ளவர்களுக்கும் சாதிய வன்மம் உண்டு என்பதற்கு கவின் செல்வகணேஷின் கொலையே சாட்சி.

பணமும், செல்வாக்கும் எங்கே இருக்கிறதோ, அந்தப் பக்கம் காவல்துறை தனது கடமையை நகர்த்திக் கொள்கிறது. மகளிர் காவல் நிலையங்களும் கூட, அதிகார ஆணவத்தில் ஆண்கள் காவல் நிலையங்களோடு எள் முனை அளவு வித்தியாசமுமின்றி அணி சேர்ந்து விட்டன.

சாதிகள் சமயங்கள் கடந்து திருமணம் செய்து கொள்ள வழிவகுக்கும் சிறப்புத் திருமணச் சட்டம், 1954 லேயே நிறைவேற்றப்பட்டு, 1955 ஜனவரி 1ஆம் நாள் செயல்பாட்டுக்கு வந்தது. 70 ஆண்டுகள் கடந்த பின்னும், அந்தச் சட்டத்தின்படி திருமணம் செய்து கொள்வோரை அரசாங்கத்தால் பாதுகாக்க முடியவில்லை.

உழைக்கும் பெண்கள், மாணவர்களுக்கு விடுதிகள் இருப்பதைப் போல, எதிர்ப்புகளை மீறும் சாதி மறுப்புத் தம்பதிகளுக்குப் பாதுகாப்பு தந்து, எதிர்ப்பவர்களை விலக்கி வைக்கும் அதிகாரமும் பயிற்சியும் கொண்ட பணியாளர்களோடு கூடிய விடுதிகள் அமைய வேண்டும். அதுவே சமூகநீதி சுயமரியாதை விடுதி!

பல விஷயங்களில் நாட்டுக்கே முன்மாதிரியாக வழங்கும் தமிழ்நாடு, சாதி மறுப்புத் தம்பதிகளைப் பாதுகாக்க, நன்கு பரிசீலித்து சிறப்புத் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும்.

# தூத்துக்குடி கவின் சாதி ஆணவப் படுகொலை

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளதாவது.

தூத்துக்குடி இளைஞர் கவின் சாதி ஆணவப் படுகொலை செய்யப்பட்டு உயிரிழந்திருப்பது கடும் அதிர்ச்சி அளிக்கிறது. இப்படுகொலையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநிலக் குழு வன்மையாகக் கண்டிப்பதோடு, சாதி ஆணவப்படுகொலையில் ஈடுபட்டவர்களை நீதியின் முன் நிறுத்தி கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது.



படுகொலை செய்யப்பட்ட கவின் சென்னை ஐ.டி.துறையில் பணியாற்றி வருபவர். இவர் திருநெல்வேலி சித்த மருத்துவர் சுபாஷினியை நேசித்துள்ளார். இருவரும் மனம் இசைந்து திருமணம் செய்ய முடிவு செய்துள்ளனர். இதனை ஏற்காத சாதிய ஆதிக்கச் சக்திகள் 27.07.2025 அன்று கவினை வெட்டிப் படுகொலை செய்துள்ளனர்.

இன்றைய தொழில்நுட்ப உலகில் கல்வியும், அறிவும் வளர்ந்தோங்கும் சூழலில், இதுபோன்ற படுகொலைகள் சமூக நல்லிணக்கத்தைச் சிதைக்கிறது. சமத்துவச் சிந்தனைகளைத் தடுக்கிறது. சமூகப் பதற்றத்தை அதிகரிக்கச் செய்கிறது. இது தமிழ்ச் சமூகத்திற்குப் பேராபத்தாகும். சாதிய ஆணவப் படுகொலைகள் தொடராமலிருக்கத் தனிச் சட்டம் இயற்ற தமிழக அரசு முன்வர வேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு கேட்டுக் கொள்கிறது என மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## சோழன் ராசேந்திரன் விழா... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

இருக்கிறது.

அரசமைப்புச் சட்டம் தந்திருக்கின்ற ஒன்றிரண்டு உரிமைகளையும் பறித்து, ஒற்றை ஆட்சியை நிறுவ முனையும் பா.ச.க.வினர் சோழர் பற்றிப் பேச எத்தகைய தகுதியையும் பெற்றிருக்கவில்லை.

தமிழருக்கான அறிவிப்பு இல்லை

தமிழரின் பெருமை சோழப் பேரரசர்களின் சிறப்பு ஆகியவற்றைப் பற்றிப் பேசிய மோடி, தமிழ்ப் பண்பாடு தொடர்புடைய எத்தகைய அறிவிப்பினையும் வெளியிடவில்லை. தமிழ் மக்கள் நலனுக்கான திட்டங்களையும் அறிவிக்கவில்லை.

தமிழர்களின் பெருமையைப் பேசி, தங்களுடைய சமயச் சார்பு அரசியலுக்கு வலுச் சேர்க்கவே முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

முதலாம் ராசராசனைச் சிறப்பிக்கும் வகையில் அன்றாடம் பயன்படுத்துகின்ற அளவிலான காசுகள் முன்னர் வெளியிடப்பட்டன. அதுபோன்று, அன்றாடம் பயன்படுத்தும் காசுகள்கூட முதலாம் ராசேந்திரனுக்கு வெளியிடவில்லை. ஆயிரமாவது ஆண்டினைக் கொண்டாடும் வகையில் முதலாம் ராசேந்திரனுடைய அஞ்சல் தலையும் வெளியிடப்படவில்லை.

கங்கைகொண்ட சோழபுரம் பெருவுடையார் கோயிலில் இடம்பெற்றுள்ள கலைச் சிறப்புகள், கல்வெட்டுப் பதிவுகள், பிற இடங்களில் உள்ள முதலாம் ராசேந்திரனுடைய கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள் போன்றவற்றை வெளியிடும் ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை.

தமிழர் பெருமை பேசிய மோடி, தமிழரின் தொன்மையை நிலைநாட்டிய கீழடி அகழ்வுகள் குறித்தோ, அவற்றின் வழியாகப் பெற்ற பண்டைச் சிறப்புகள் பற்றியோ வாய் திறக்கவில்லை.

கீழடி அகழ்வு அறிக்கை விரைவில் வெளியிடப்படும் என்ற உறுதிமொழியையும் தரவில்லை.

முதலாம் ராசேந்திரன் நிறுவிய கங்கைகொண்ட சோழபுரத்தில் அகழ்வுகளை மேற்கொள்வது பற்றியும் பேசவில்லை.

இன்றைய இந்திய ஒன்றியத்தின் வரைபடத்துக்கான முன்னோடியாகச் சோழரது ஆட்சிப் பகுதிகள் திகழ்கின்றன என்று கூறிய மோடி, சோழர்களின் படை வெற்றியை இன்றைய சிந்தூர் படை நடவடிக்கைகளுடன் ஒப்பிடுகிறார். சிந்தூர் படை நடவடிக்கைகள் பள்ளிப் பாடங்களில் இடம்பெறப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதைப் போல், சோழர்களது ஆட்சியின் சிறப்புகளை வட மாநிலப் பள்ளிப் பாடங்களில் இடம்பெறச் செய்ய மோடி ஏற்பாடுகள் செய்வாரா என்பது தெரியவில்லை.

இவை அனைத்தும் ஒன்றிய அரசின் பொறுப்பில் உள்ளவையே.

முதலாம் ராசராசனுக்கு 35 அடி உயரச் சிலை அமைக்கப்படும் என ஏற்கனவே தமிழ்நாடு முதல்வர் அறிவித்திருந்த நிலையில், முதலாம் ராசராசனுக்கும் முதலாம் ராசேந்திரனுக்கும் சிலை அமைக்கப்படும் என்ற அறிவிப்பை பிரதமர் வெளியிட்டிருக்கிறார்.

மாநில அரசு ஆக்க முயற்சிகளை முன்னெடுத்திருக்கும் நிலையில், ஒன்றிய பா.ச.க. அரசு ஆன்மீகத்துக்குள் புகுந்து மக்களை மயக்க முடியும் என இன்னும் நம்பிக்கொண்டிருப்பதாகவே தெரிகிறது.

முருகனை முன்னெடுத்துக் கண்ட தோல்வியை அடுத்து, சைவம், சோழர் என முயற்சிகள் தொடர்கின்றன.

ஆனால், தமிழர்களிடம் இவையெல்லாம் எடுபடப்போவதில்லை.

**தொடர்புக்கு : 9444075561**

## எங்கெங்கு காணினும்... 2 ஆம் பக்கத் தொடர்ச்சி

உரை வீச்சுக்காக அல்ல! புதிய விடியலுக்காகக் கூடுகின்றோம்! நாட்டின் ஓர் அங்கமாகத் திகழ்ந்துவரும் பெருமைக்கும், போற்றுதலுக்கும் உரிய செந்தமிழ் நாட்டில் சமூக மாற்றத்திற்கான போரை இடைவிடாமல் நடத்தி வருவது மட்டுமல்ல. அப்போரின் மூலம் வெற்றி பல கண்டுள்ளோம். நம் சாதனைகள் ஏராளம், ஏராளம்!

அத்தகைய சாதனைகள் தொடர வேண்டும். தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும். தொடர் எழுச்சிமிக்க இயக்கங்கள் மூலம் தமிழ்நாட்டு மக்களிடையே விழிப்புணர்ச்சியைத் தொடர்ந்து ஏற்படுத்துவோம்!

புதியதோர் சமுதாயம், பொதுவுடமைச் சமுதாயம் காண நம்மை அர்ப்பணித்துக் கொள்ள, அயராமல் பாடுபட மேலும் நாம் என்ன செய்ய வேண்டும்? என்பதனைத் திட்டமிட சேலத்தில் கூடுகின்றோம்.

சேலம் மாவட்டம் முழுவதும் மாநாட்டு விளம்பரங்கள். வண்ண மயமான விளம்பரங்களைச் செய்து, பார்ப்போர் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளனர் நமது தோழர்கள்.

மாநாட்டு வரவேற்புக் குழுத் தோழர்கள் இரவு பகல் பாராமல் தேனீயைப் போன்று செயலாற்றி வருவது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது மட்டுமல்ல, பாராட்டுக்கும் உரியது. விளம்பரம் மட்டுமல்ல, சேலம் நகரம் உட்பட மாவட்டம் முழுவதும் செங்கொடிகளைப் பறக்க விட விரிவாகத் திட்டமிட்டுள்ளனர்.

எங்கெங்கு காணினும் செங்கொடிகளும், செந்தோரணங்களும் அலங்கரிக்க இருக்கின்றன. காண வேண்டாமா? ஓரிரு வாரங்களே உள்ளன! ஆயத்தமாவீர்! குடும்பம் குடும்பமாய்ப் பங்கேற்பீர், அணி வகுப்பீர்!

கொள்கை முழக்கமிட்டு வாரீர்! செஞ்சட்டை அணிந்து செங்கொடி தாங்கி போர்ப்படை எனப் புறப்பட்டு வாரீர்! மீண்டும் சந்திப்போம்!

வணக்கம்

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்



த.லெனின்

# மோசடி நிறுவனம் ரிலையன்ஸ்!

**கார்ப்பரேட்டுகளின் கவர்ச்சி நாயகன், அதன் வளர்ச்சிக்கு எப்போதும் ஆதரவு! கார்ப்பரேட் ஊழலுக்குக் கவரிவீசி நிற்பார். தேவை எனில் பொதுத்துறை நிறுவனங்களை அவர்களுக்கு அடிமாட்டு விலைக்கு விற்பார். அவர்தான் இந்திய பிரதமர் சாட்சாத் மோடி!**

அனில் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் அனில் திருபாய் அம்பானி குழுமத்திற்கு எதிரான அமலாக்க இயக்குநரகத்தின், கடன் மோசடி விசாரணையில், ரிலையன்ஸ் பவர் நிறுவனம் விளக்கம் அளிக்க வேண்டும் என்று கடந்த வாரம் வலியுறுத்தப்பட்டது.

அனில் அம்பானியுடன் தொடர்புடைய நிறுவனங்கள் தொடர்பான 35 இடங்களில், அமலாக்கத் துறை சோதனை நடத்தியது. ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸை "மோசடி நிறுவனம்" என்று ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா வகைப்படுத்தியுள்ளது, இறுதியில் அதன் முன்னாள் இயக்குனர் அனில் அம்பானி மீது இந்திய ரிசர்வ் வங்கியிடம் மோசடி புகாரும் அளித்துள்ளது.

## விளங்காத, விளக்கமளித்த ரிலையன்ஸ் நிறுவனம்!

அமலாக்கத் துறையின் சமீபத்திய நடவடிக்கைகள், தங்களது வணிகச் செயல்பாடுகள், நிதிச் செயல்திறன், பங்குதாரர்கள், ஊழியர்கள் அல்லது ரிலையன்ஸ் பவரின் வேறு எந்தப் பங்குதாரர்களையும் அறவே பாதிக்காது என்று ரிலையன்ஸ் குழுமம் தெரிவித்துள்ளது.

ரிலையன்ஸ் பவர் என்பது வேறு எந்தவொரு வணிகமும் இல்லாத ஒரு தனிப்பட்ட, சுயாதீனமான பட்டியலிடப்பட்ட நிறுவனம் என்று கூறிக் கொள்கிறது.

"ரிலையன்ஸ் கம்யூனிகேஷன் அல்லது ரிலையன்ஸ் வீட்டுக் கடன் நிறுவனம் உடனான நிதி இணைப்பு கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேலாக திவால்நிலை மற்றும் திவால்நிலை குறியீட்டின் கீழ் வந்துள்ளது. இதன்படி கார்ப்பரேட் திவால்நிலை தீர்வு செயல்முறைக்குத் தனது நிறுவனம் உட்பட்டுள்ளது என்று ரிலையன்ஸ் நிறுவனம் ஊடகச் செய்தியில் தெரிவித்துள்ளது.

ஊடக அறிக்கைகளில் குறிப்பிடப் பட்டுள்ளதைப் போன்ற குற்றச்சாட்டுகள் நீதிமன்ற விசாரணையில் உள்ளன.

பொதுவில் கிடைக்கும் தகவல்களின் படி, பத்திரங்கள் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன் நிலுவையில் உள்ளன.

ரிலையன்ஸ் குழும நிறுவனங் களிலிருந்து கைப்பற்றப்பட்ட ஏராளமான ஆவணங்கள் மற்றும் டிஜிட்டல் பதிவுகளை அமலாக்கத்துறை ஆராய்ந்து வரும் நிலையில், குறிப்பாக, ரிலையன்ஸ் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் (RHFL) அதன் பல்வேறு தொடர்புடைய நிறுவனங்களுக்கு ரூ.12,000 கோடி கடன்களைத் திருப்பி அனுப்பியதாகக் கூறப்படும் வழக்கை அமலாக்கத்துறை ஆராய்ந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், அனில் அம்பானி ரிலையன்ஸ் பவர் வாரியத்தில் இல்லை. அதன்படி, RCOM அல்லது RHFL மீது எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையும் ரிலையன்ஸ் பவரின் நிர்வாகம், மேலாண்மை அல்லது செயல்பாடுகளில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது. ரிலையன்ஸ் பவர் அதன் வணிகத் திட்டங்களில் தொடர்ந்து கவனம் செலுத்துகிறது. அனைத்துப் பங்குதாரர்களுக்கும் நன்மதிப்பை உருவாக்குவதில் உறுதியாக உள்ளது என்று தெரிவித்துள்ளது.

## ஊழலின் ஊற்றுக்கண் ரிலையன்ஸ்!

ஆனால் தேசிய நிதி அறிக்கையிடல் ஆணையம், சிபிஐ, இந்தியப் பாதுகாப்பு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (செபி) மற்றும் தேசிய வீட்டுவசதி வங்கி ஆகியவை அமலாக்கத்துறைக்கு உதவுகின்றன. ஏனெனில் இது பெரும் பொது நிதியைத் தவறாகப் பயன்படுத்துவதை உள்ளடக்கியது. குழுமத்தின் குறைந்தது 12 தொடர்புடைய நிறுவனங்கள் தற்போது திவால் நடவடிக்கைகளுக்கு உட்பட்டுள்ளன. அதாவது வங்கிகளுக்குப் பெரும் இழப்புகள் ஏற்படுகின்றன.

கடன் வழங்கப் படுவதற்குச் சற்று முன்பு, யெஸ் வங்கியிடம் அது பணம் பெற்றதாக அமலாக்கத் துறை கண்டறிந்துள்ளது.

லஞ்சம் மற்றும் கடனுக்கு இடையிலான தொடர்பை இந்நிறுவனம் விசாரித்து வருகிறது.

அனில் அம்பானி குழுமங்களுக்குத் தொடர்புடைய பல நிறுவனங்களுக்கு வழங்கிய ரூபாய் 12,000 கோடி கடன்களில் சுமார் 7,000 கோடி தள்ளுபடி செய்த ரிலையன்ஸ் வீட்டுக் கடன் வழங்கும் நிறுவனத்தின் மீது நிதி மோசடிக் குற்றச்சாட்டுகளை செபி விசாரணை அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

இதில் அம்பானி தனது ரிலையன்ஸ் வீட்டுக் கடன் நிறுவனத்திடம் இருந்து தனது மனைவி பிந்து கபூர் அவரது நிறுவனங்கள் மூலம் அதன் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி ராணா கபூருக்கு லஞ்சம் கொடுத்ததாகக் கூறி உள்ளது.

எஸ் வங்கியிடமிருந்து 2,965 கோடி நிதியைப் பெற்றதாக ஏற்கெனவே விசாரணையில் உள்ளார் அவர். இந்த எஸ் வங்கியில் பெறப்பட்ட கடனில் 1353 கோடி வராக் கடனாக மாற்றியுள்ளது மோடி அரசு. இது எதைக் காட்டுகிறது? இந்த வராக் கடன்கள் குறித்துக் கேள்வி எழுப்பிய போதுதான் நமது நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அதற்குப் பல பொழிப்புகளை அப்போது வழங்கினார். வராக்கடன் என்றால் திரும்ப வசூலிக்கப்படும் கடன் என்றார். ஆனால் இன்று வராக் கடன் தராக்கடனாக மாறிவிட்டது.

## ரிலையன்ஸ் மோசடி நிறுவனம்!

அம்பானியின் பல்வேறு நிறுவனங் களுக்குக் கடன் வழங்குவதற்காக, யெஸ் வங்கியின் நிறுவனர் ராணா கபூர், சட்டவிரோதமாக நிதி ஆதாயம் பெற்றிருந்தது தெரியவரும் சூழலில், யெஸ் வங்கியிடம் அனில் அம்பானி ரூ.12 ஆயிரத்து 800 கோடி கடன் பெற்றுள்ளார். எனவே, இது தொடர்பாக அனில் அம்பானியிடம் அமலாக்கத்துறை தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறது. கடந்த ஜூன் 13ம் தேதி அனில் அம்பானி மற்றும் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்தை, எஸ்.பி.ஐ, மோசடியாளர் எனப் பட்டியலிட்டது. ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம் மற்றும் அதன் இணை நிறுவனங்கள் ஒட்டுமொத்தமாக ரூ.31,580 கோடி கடன் பெற்றுள்ளது. இதில், 44 சதவீதத்தை, அதாவது ரு.13,667 கோடி, ஏற்கெனவே வாங்கிய கடனை அடைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ரூ.12,692 கோடியை துணை நிறுவனங்களுக்கு மாற்றம் செய்துள்ளது. இதுவரையில் வாங்கிய ரூ.41,863 கோடி கடன் தொகையில், ரூ.28,421 கோடியின் பயன்பாடு மட்டுமே கண்டறியப்பட்டுள்ளது. மீதித் தொகை என்னவானது? எதற்குப் பயன்படுத்தியது? என்பது இன்னும் தெரியவில்லை. எனவேதான் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்தையும், அனில் அம்பானியையும் மோசடியாளர் என்று எஸ்.பி.ஐ., வகைப்படுத்தியுள்ளது.

## கடந்த 9 ஆண்டுகளுக்குப் பிறகு

மிகவும் காலதாமதமாக அனில் அம்பானியின் 'ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ்' நிறுவனத்தின் கடன் கணக்கை மோசடி வழக்காக 'ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா' அறிவித்துள்ளது. ஆனால், ரூ.48 ஆயிரத்து 545 கோடி அளவிற்கான மக்கள் பணம் சூறையாடப்பட்ட பிறகே இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அப்படி மோ(ச)டி அரசின் கார்ப்பரேட் விசுவாசம் கரை புரண்டு ஓடியது கண்கூடாகத் தெரிகிறது. இதைத்தான் உலகமய காலகட்டத்தில் 'திறமை' என்று சொல்கிறார்கள் போலும்.

## திட்டமிட்ட நிதி மோசடி!

அனில் அம்பானியின் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம் நடத்திய இந்த நிதி மோசடி, ஒரு திட்டமிட்ட கொள்ளையாகும்.

2016ஆம் ஆண்டிலிருந்து தொடங்கிய இந்த மோசடியில், இந்நிறுவனம் 53 பொதுத்துறை வங்கிகளிடமிருந்து ரூ.49 ஆயிரம் கோடி கடன் பெற்று, பின்னர் அதில் வெறும் ரூ.455 கோடியை மட்டுமே திருப்பிக் கொடுத்து விட்டுத் தப்பித்துள்ளது. அதாவது மோடி அரசால் தப்பிக்க வைக்கப்பட்டுள்ளது. குட்டு வெளிப்பட்ட உடன், அதிலும் நீதிமன்ற விசாரணையில் இருப்பதால் இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறது அமலாக்கத்துறை.

அனில் அம்பானி போன்றவர்கள் எவ்வாறு தங்களது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி மக்களின் பணத்தைத் திருடுகிறார்கள் என்பதற்கு இது ஒரு நேரிடையான உதாரணமாகும். மோடி அரசு சர்ச்சைக்குரிய இந்தத் தீர்வுக்கு எப்படி அனுமதி அளித்தது? கடைத் தேங்காயை எடுத்து வழி பிள்ளையாருக்கு உடைப்பதைப் போல ரூ. 49 ஆயிரம் கோடி கடனை, வெறும் 455 கோடி ரூபாயைக் திரும்பக் கொடுத்து விட்டுக் கணக்கை முடிக்குமாறு அனுமதித்த கொள்கை முடிவு, இன்று மோடி அரசின் நேர்மை மீது கடுமையான கேள்விகளை எழுப்புகிறது.

மோடி அரசு ஒருபுறம் ஏழைகளிடமிருந்து பெட்ரோல், எரிவாயு, உணவுப் பொருட்களுக்குக் கூடுதல் வரி என்று வரி மேல் வரி வசூலித்துக் கொண்டிருக்கிறது. மறுபுறம் பெரும் நிறுவனங்களை வளர்த்து விடுவதற்கு அவர்களது வரிகளை, கடன்களைக் குறைத்து, தள்ளுபடி செய்து விடுவதும் மோடி அரசின் எழுதப்படாத சட்டமாகும். அதைத்தான் எங்கும் அமல்படுத்தி வருகிறது.

மோடியின் அணுக்க நண்பர் அதானி நிறுவனத்திற்கு மொரீசியஸ் போலி நிறுவனங்களிடமிருந்து வந்த 20 ஆயிரம் கோடி ரூபாய் கறுப்புப் பணம், மோசடிப் பணம் இன்றுவரை அமலாக்கத் துறையால் கேள்விக்கு உட்படுத்தப்படவில்லை ஒன்றிய அரசின் புலனாய்வு நிறுவனங்கள் புலனடக்கத்தோடு நடந்து கொள்கின்றன. நீதிமன்றங்கள் தலையிட்டால்தான் ஒருவேளை இந்த நிறுவனங்கள் இவற்றில் அசையக் கூடும். இதுதான் சுத்த சுயம் பிரகாசம் ஊழல் ஒழிப்பு ஆர்எஸ்எஸ் சித்தாந்தத்தின் வெளிப்பாடா? நடிப்பு சுதேசிகள் போலவே நடிப்பு ஊழல் ஒழிப்புப் போராளிகளாவர். உண்மையில் ஊழலைத்தான் இவர்கள் ஊட்டி வளர்க்கிறார்கள். அதற்கான சமீபத்திய எடுத்துக்காட்டுதான் இந்த நிகழ்வு போக்குகள்.

தொடர்புக்கு: 9444481703

**ஸ்டேட் வங்கி அம்பானியை மோசடிப் பேர்வழி என்கிறது**



**ஆனால் மோடி அரசு அம்பானிக்கு வாரி வழங்கிய தொகை**

1. சூரிய சக்தி மற்றும் மின்கல சேமிப்புத் திட்டம் (ரூ.10,000–15,000 கோடி)
2. வெடி மற்றும் இராணுவ போர்க்கருவி தயாரிப்பு திட்டம் (ரூ.10,000 கோடி)
3. டோர்னியர்–228 போர் விமான மேம்பாட்டு திட்டம் ((ரூ.5,000 கோடி)
4. இராணுவ கருவிகள் தயாரிக்க டெல்லியுடன் ஒப்பந்தம் (ரூ.10,000 கோடி)
5. மும்பை மெட்ரோ வழித்தடம் 1 திட்டம் (ரூ.780 கோடி)



**இளைஞர் விரோதச் சக்திகளை இடுப்பொடித்து விரட்டுவோம்!**
**மாணவர் விரோதச் சக்திகளை மண்டையில் அடித்து விரட்டுவோம்!**
**அணி திரண்டு வாரீர் சேலம் நோக்கி!**



எம்.ரவி

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டதும் தடை நீக்கப்பட்டதும் 4



**இந்தியாவில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பிறப்பதற்கு முன்பே, அதாவது கருவாக உருவாகும் போதே அதனை உருக்குலைத்துக் கொன்றொழிப்பதற்கான முயற்சிகளை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசாங்கம் மேற்கொண்டது. சதி வழக்குகள், சிறை, சித்ரவதைக் கொடுமைகள், தூக்கு, துப்பாக்கிச் சூடு என கம்யூனிஸ்டுகள் வேட்டையாடப்பட்டனர்.**

1934 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 1942 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் தேதி வரை 8 ஆண்டு காலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசாங்கம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சட்டபூர்வமாகத் தடை செய்தது.

விடுதலைக்குப் பின்னர் 1948 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் தேதி முதல் 1951 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை சுமார் 4 ஆண்டு காலம் நேரு தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சட்டபூர்வமாகத் தடை செய்தது.

ஆகஇந்தியாவில்இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி இரண்டு முறை தடைசெய்யப்பட்டு 12 ஆண்டு காலம் சட்டபூர்வமாகச் செயல்படாமல் தடுக்கப்பட்டது.

இவ்வாறு இந்தியாவில் எந்த ஒரு கட்சியும், இயக்கமும் சட்டபூர்வமாகத் தடை செய்யப்படவில்லை. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் ஏன் இவ்வாறு செயல்படக் கூடாது எனத் தடை செய்யப்பட்டது? எதற்காகத் தடை செய்யப்பட்டது? கம்யூனிஸ்டுகள் என்ன தவறு செய்தார்கள்?

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இந்த நாட்டில்இனரீதியாக, மொழிரீதியாக அல்லது மதரீதியாக ஏதாவது பிரிவினை கேட்டுப் போராடியதா? கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டி வளர்த்த தோழர்கள் தலைவர்கள் என்ன தீவிரவாதிகளா? கொலைகாரர்களா? கொள்ளைக்காரர்களா? பதுக்கல் பேர்வழிகளா? பயங்கரவாதிகளா? இல்லையே! பிறகு ஏன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சட்டப்பூர்வமாக இயங்க முடியாமல் தடைசெய்யப்பட்டது?

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியாவில் சொந்த நாட்டு மக்களை அடிமைப்படுத்தி அடங்கி ஆண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடியது. இந்தநாட்டின் செல்வ வளங்களையும், மனித வளங்களையும் சுரண்டி கொள்ளையடித்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடியது.

இந்தியாவில் அடங்கியும் அடக்கப்பட்டும் கிடந்த மக்களின் விடுதலைக்காகப் போராடியது. ஒடுங்கியும், ஒடுக்கப்பட்டும் கிடந்த மக்களின் நலங்களுக்காகப் போராடியது. மனிதனை மனிதன் சுரண்டும் இந்தக் கேடுகெட்ட முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடியது. எல்லோரும் எல்லாமும் பெற்று மக்கள் இன்பமுடன் வாழும் சமத்துவச் சமுதாயத்தைப் படைப்பதற்காகப் போராடியது, போராடிக் கொண்டிருக்கிறது. இதுதான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செய்த, செய்துகொண்டிருக்கிற போராட்டங்களாகும்.

ஆகவே தங்களின் சுண்டல்களுக்கு எதிராகவும் சமத்துவச் சமுதாயம் படைப்பதற்காகவும் மக்களைத் தூண்டிவிடுகிற கம்யூனிஸ்ட் கட்சியைச் செயல்பட அனுமதிக்கக் கூடாது என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசாங்கமும், காங்கிரஸ் அரசாங்கமும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சட்டபூர்வமாகச் செயல்படக் கூடாது எனத் தடை விதித்தனார்

இவ்வாறு 12 ஆண்டு காலம் தடை செய்யப்பட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்ன ஆனது? என்ன செய்தது? ஓடி ஒளிந்து கொண்டதா? முடங்கிப் போய்விட்டதா? கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் கட்சியைக் கலைத்துவிட்டு கைலாசத்திற்குச் சென்று விட்டார்களா? இல்லை இல்லவேயில்லை வீறுகொண்டெழுந்தனர்.

தூக்கு மேடை ஏறத் தயார்!<br>
சுடும் துப்பாக்கி முன் நிற்கத் தயார்!<br>
எங்கள் நோக்கம் நிறைவேற<br>
எந்தத் தியாகமும் செய்யத் தயார்!

என்று வீர முழக்கமிட்டு, நெஞ்சை நிமிர்த்தி களப் போராட்டங்களை நடத்தினார்கள். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை வங்கம் முதல் மராட்டியம் வரை இந்தியா முழுவதும் குறுக்கும் நெடுக்குமாக நடந்த விடுதலை வேள்வியில் இலட்சக்கணக்கான கம்யூனிஸ்டுகள் அளப்பரிய தியாகங்களைச் செய்தார்கள்.

விடுதலைக்குப் பின்னரும் தடை செய்யப்பட்ட போதும், தலைக்கு விலைவைத்த போதும், தலைமறைவாக வாழ்ந்து கொண்டு தடைகளைத் தகர்த்தெறிந்தார்கள். அஞ்சவில்லை, கெஞ்சவில்லை நெஞ்சுரத்தோடு போராடினார்கள்.

உலகத்திலேயே உயர்ந்த தத்துவமான மார்க்சியத்தை நெஞ்சில் இறுத்தி இறுதிவரைப் போராடினார்கள். அந்தப் போராட்டத்தில் வரலாறு மெய்சிலிர்க்க வைக்கும் வரலாறு, சோகம் ததும்பும் வரலாறு. ஆனால் வீரம் செறிந்த வரலாறாகும்; அந்த வீரதீர தியாக வரலாற்றை நமது ஜனசக்தியில் தொடர்ந்து வெளியிட உள்ளோம்.

தமிழ்நாட்டில் இந்த வீர தீர தியாகப் போராட்டத்தின் உச்சகட்டமாக சிறைக் கொட்டடியில் நிராயுதபாணிகளாக இருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 22 தலைவர்களைத் துப்பாக்கியால் சுட்டும், லத்திகளால் அடித்தும் கொல்லப்பட்ட அந்தத் தியாக பூமியான சேலத்தில்தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில 26 வது மாநாடு வருகிற 2025 ஆகஸ்ட் 15, 16, 17, 18 ஆகிய நான்கு நாட்கள் நடைபெறுகிறது.

அங்கே செங்கடலெனச் சங்கமிப்போம் சந்திப்போம்.

லால்சலாம்! இன்குலாப் ஜிந்தாபாத்!

**தொடர்புக்கு: 9442736668**

# மலையாளி இன மக்களைப் பழங்குடியினராக அங்கீகரிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு முழுவதும் உள்ள மலையாளி இன மக்கள் பழங்குடியினராக அங்கீகரிக்கப்பட்டு எஸ்.டி.சான்று பெற்று வருகின்றனர். ஆனால், ஈரோடு மாவட்டத்தில் பர்கூர் கடம்பூர் மலைப்பகுதியில் வாழும் மலையாளி இன மக்கள் மட்டும் பழங்குடியினராக அங்கீகரிக்கப்படாமல், இதரர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளனர். கடந்த ஐம்பது ஆண்டுகாலமாக, தங்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என இம்மக்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா ஆகியோரும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒன்றிய அரசு மேலும் காலதாமதம் செய்யாமல், நடப்பு நாடாளுமன்ற கூட்டத் தொடரிலேயே உரிய சட்டத்திருத்தத்தைச் செய்து, ஈரோடு மாவட்ட மலையாளி மக்களைப் பழங்குடியினராக அங்கீகரிக்க




வேண்டும். இதற்கிடையில் கடந்த வாரம் கடம்பூர் வருகை தந்த நடாளுமன்ற இணை அமைச்சர் எல்.முருகன் இப்பிரச்சனையைத் திசைதிருப்பும் வகையில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினால்தான் பழங்குடியினராக அங்கீகரிக்க முடியும் என்று தெரிவித்துள்ளார். இது இம்மக்களின் பிரச்சனைக்குத் தீர்வு காணாமல், மேலும் காலந்தாழ்த்தவும், மாநில அரசின் மீது பழி போடும் வகையிலும் தெரிவிக்கப்பட்ட கருத்தாகும்.

எனவே இதனைக் கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் கே.ராமசாமி தலைமை தாங்கினார். கடம்பூர் மலை வட்டார துணைச் செயலாளர் மோகன்ராஜ், தொழிற்சங்கப் பொறுப்பாளர் தங்கராஜ், மலை வட்டாரச் செயலாளர் மகேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கடம்பூர் மலை வட்டார துணைச் செயலாளர் ஜடையலிங்கம், கலை இலக்கியப் பெருமன்றப் பொறுப்பாளர் திருப்பூர் குணா, கட்சியின் வடக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.மோகன் குமார் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.



அமீனா புகுந்த வீடும்,
ஆர்.எஸ்.எஸ் புகுந்த நாடும் அறவே உருப்படாது!
சேலத்தில் செங்கடலென அணி திரள்வோம்!

# அமைதியான கூட்டத்தில் சுட்டு 8 பேரைக் கொன்ற நயவஞ்சக போலீஸ்



ப.பரமசிவம்

- விவசாயிகளின் கடன் வசூலை ஒத்தி வைத்தல்
- மின் கட்டண உயர்வை ரத்து செய்தல்
- விவசாய விளை பொருளுக்கு நியாயவிலை நிர்ணயித்தல்
- வறட்சிப் பகுதிகளுக்கு நிவாரணம் அளித்தல்
- கால்நடைகளுக்கும் பயிர்களுக்கும் பாதுகாப்பு இன்சூரன்ஸ் செய்தல்
- தண்டத் தீர்வையை நீக்குதல்
- விவசாய வருமான வரி விதிப்பின் புதிய முறையைத் திருத்தியமைத்தல்
- பாசன வசதியைப் பெருக்குதல்
- விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்தல்
- நிலமற்றோருக்கு வனத்தரிசு புறம்போக்கு நிலங்களை வழங்குதல்
- வீடில்லாதோருக்கு வீட்டு மனை நிலம் வழங்குதல்

இந்த 12 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆளும் காங்கிரஸ், காமராஜர் தலைமையில் இருந்த பழைய காங்கிரஸ் ஆகிய அரசியல் கட்சிகளும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் போன்ற உழவர் நலனில் அக்கறையுள்ள அமைப்புகள் பல போராட்டங்களை நடத்தினர். கடைசியாக பந்த் பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விட்டனர்.

1972 ஜூலை 5ல் வேலை நிறுத்தம் என்று அறிவித்தவுடன் தமிழ்நாடு முழுதும் முக்கியத் தலைவர்களைப் பிடித்துச் சிறையில் அடைத்துவிட்டார்கள். அதைபோல் சேலம் மாவட்டத்திலும் தலைவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்துவிட்டார்கள். அதே போல் பெத்தநாயக்கன்பாளையத்திலும் கல்லேரிப்பட்டி கே.ஏ.கோவிந்தசாமி விவசாயச் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் டி.சண்முகம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாவட்டச் செயலாளர் பி.கிருஷ்ணன், சிங்கார நாயக்கர், ராஜேஷ், நகரச் செயலாளர் ஏ.ஆறுமுகம், கட்சியின் முன்னாள் மாநிலக் குழு உறுப்பினர் ஒன்றியச் செயலாளர் ஏ.அங்கமுத்து, கல்லேரிப்பட்டி காங்கிரஸ் முன்னாள் எம்.எல்.ஏ பழனிமுத்து மற்றும் காங்கிரஸ்கார வீட்டார்கள் உள்பட 10 நாட்களுக்கு முன்பே கைது செய்யப்பட்டார்கள்.

**பெத்தநாயக்கன்பாளையம்**
**பாட்டாளி வர்க்கத்தின் பாசறை**
**உரிமை போரின் குரு ஷேத்திரம்**
**கொள்கை மறவர்களின் கூடாரம்**
**செங்கொடி தோழர்களின் தாயகம்**
**கம்யூனிஸ்ட் கட்சியின் உருக்குக் கோட்டை**

அப்படிப்பட்ட பெத்தநாயக்கன் பாளையத்தில் மாநிலப் போராட்டக் குழு அறிவித்தப்படி 1972 ஜூலை 5 ஆம் தேதியில் பந்த் முழு வேலை நிறுத்தத்தை வெற்றிப் பெறச் செய்தவர்கள் எம்.அப்பாவு உடையார், எஸ்.முருகன், கே.பெரியசாமி, ஏ.அங்கமுத்து, கே.துரைசாமி, கே.எஸ்.மாணிக்கம், ஏ.ஆறுமுகம், டி.ஆறுமுகம், ப.தங்கவேல், எம்.அல்லிமுத்து, ப.காந்தி, ப.தங்கவேல், துரைசாமி, சீனிவாசன், பிரகாசம், எஸ்.வேலு துரைசாமி (சாமியார்), டிமணி, எஸ்.தனபால், கே.தனசேகரன், ஜெகநாதன், நாகமாணிக்கம் முதல் நாள் இரவு இளம் தோழர்கள் சாந்தமூர்த்தி, ஆறுமுகம், முட்டாசு, சிக்கமுத்து, கோவிந்தராஜ், முத்துசாமி, செல்வராஜ் (எ) முத்துராஜகோபால் போன்றோர்கள் ஆவர். ஏரியில் வண்டல் மண் எடுத்துக் கொண்டு வந்த விவசாயிகள் சாலையின் இருபக்கங்களிலும் வண்டிகளை நிறுத்தி வைத்திருந்தார்கள். ஒவ்வொரு வண்டியின் சக்கரத்தைக் கழற்றி சாலையில் போட்டுத் தடை ஏற்படுத்தி விட்டார்கள்.

போலீஸ்படை வந்தது. உதவி ஆய்வாளர் கடுமையான வார்த்தைகளால் கூடியிருந்த மக்களைப் பார்த்து பேசினார். கலைந்து செல்லுங்கள் இல்லையெனில் சுட்டுத் தள்ளி விடுவேன் என்று துப்பாக்கியை எடுத்துக்காட்டினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொருளாளர் மாணிக்கத்தின் தம்பி தங்கவேல் துப்பாக்கி தூக்கிய கையைப் பிடித்துக் கொண்டு சுடு பார்க்கலாம் என்று உதவி ஆய்வாளர் குரல்வளையைப் பிடித்துக் கொண்டார். அதன் பிறகு உதவி ஆய்வாளர் தலைமையில் வந்த போலீஸ் படை சென்றுவிட்டது. அதன் பிறகு



ஆர்.எல். செல்வராஜ்

டி.எஸ்.பி தலைமையில் போலீஸ்படை வந்து இறங்கியது. வந்தவர் டி.எஸ்.பி கிராம சாவடியில் கூடியிருந்தவர்களிடம் சமாதானமாகப் பேசிவிட்டுப் புறப்படுகிறார்.

வெள்ளையர் ஆட்சியர் காவல் துறை நேரிலே சுடுகிறேன் என்று கொக்கரித்துக் கொண்டு சுடுவார்கள். ஆனால் சுதந்திர இந்தியாவில் நம்மவர் நம்மைச் சிரித்துப் பேசிச் சுடுவார்கள். அதுதான் பெத்தநாயக்கன்பாளையத்தில் நடந்தது.

நல்லவர்கள் போல் டி.எஸ்.பி பேசிவிட்டுப் படையோடு சென்றார். மக்கள் போலீசே திரும்பிப் போ என்று கோஷமிட்டார்கள். வேனில் வந்த போலீஸ் படைக்குச் சுடுவதற்கான சைகையைக் காட்டிவிட்டார். உடனே போலீஸ் வேனில் உள்ள ஓட்டை வழியாக துப்பாக்கியைச் செருகி 15க்கும் மேற்பட்ட துப்பாக்கியால் சுட்டுக் கொண்டே போனார்கள். துளைத்து வந்த குண்டு சாந்த மூர்த்தி மீது பாய்ந்து அதே இடத்தில் சுருண்டு விழுந்து இறக்கிறார். விவேகானந்தருக்கு வயிற்றில் சுட்டதால் குடல் சரிந்து கீழே விழுந்தார். முத்துசாமி, ஆறுமுகம், மணி, முட்டாசு, கோவிந்தராசு, பிச்சமுத்து ஆகியோர் அதே இடத்தில் சுருண்டு விழுந்து இறந்து போனார்கள். காவல் துறை துப்பாக்கியால் குண்டுகள் தீரும் வரை சுட்டுக் கொண்டே சென்றது. வங்கி ஊழியர் சீனிவாசனுக்குக் காலில் குண்டடிப்பட்டு வீழ்ந்தார்.

அந்த நேரத்தில் பதற்றத்தில் சிங்கார நாயக்கர் முன்னாள் நகரச் செயலாளர் நடராஜன் அப்பாவும் மற்றவர்களும் வீட்டிலிருந்து வெளியே வந்தவர்களை உள்ளே போங்கள் என்று அனுப்பிவிட்டு வெளியே வருகிற பொழுது ஆர்.எல். செல்வராஜ் தற்போதைய சேலம் அஸ்தம்பட்டி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராக இருக்கும் அவருடைய அப்பா லட்சுமி நாராயணனை போலீஸ் அடித்து நொறுக்கி மயக்கத்தில் இருந்தவரை போலீஸ் வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டு போய் விட்டார்கள். அதே நேரத்தில் ஆத்தூரில் பெரும் போராட்டம் நடந்தது. மக்கள் கூட்டத்தைப் பார்த்து பின்வாங்கிக் கொண்டு நரசிங்கபுரம் வழியாக பெத்தநாயக்கன் பாளையம் செல்லும் போலீஸ் நரசிங்கபுரத்தில் தோழர் ராமசாமியை போலீஸ் நாய்கள் வெறிக் கொண்டு அடித்தே கொன்று நடு ரோட்டில் வீசிச் சென்றுவிட்டார்கள்.

இப்படிப்பட்ட வீரம் செறிந்த சேலம் மாவட்டத்தில்தான் தமிழ்நாடு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 26 வது மாநில மாநாடு நடைபெறுகிறது. புறப்படுங்கள் சேலம் நோக்கி.

**தொடர்புக்கு: 9442995040**

# ஆண்டுதோறும் கூலி உயர்வு வழங்க வேண்டும்

**சுமை தூக்கும் தொழிலாளர்கள் சங்கம் தீர்மானம்**

**தஞ்சை:** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக ஏஐடியூசி சுமை தூக்கும் தொழிலாளர் சங்கத்தின், தஞ்சை மாவட்ட 39 வது ஆண்டுப் பேரவை தஞ்சாவூர் ஏஐடியூசி அலுவலகக் கூட்டரங்கில், 27.7.2025 அன்று மாவட்டச் செயலாளர் சி.சௌந்தர்ராஜன் தலைமையில் நடைபெற்றது. டி.கே. சூரியமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார். அஞ்சலித் தீர்மானத்தை பி.அன்பழகன் முன்மொழிந்தார். கொடியினை ஏஐடியூசி மாநிலச் செயலாளர் ஆர்.தில்லைவனம் ஏற்றி வைத்தார். பேரவையைச் சங்கத்தின் மாநிலத் தலைவர் அ.சாமிக்கண்ணு தொடக்கி வைத்து உரையாற்றினார். எதிர்காலக் கடமைகள் குறித்து, மாநிலப் பொதுச் செயலாளர் சி.சந்திரகுமார் உரையாற்றினார். வரவு செலவு அறிக்கையைப் பொருளாளர் தி.கோவிந்தராஜன் முன்வைத்தார்.

கட்சியின் தஞ்சை மாவட்டச் செயலாளர் கோ.சக்திவேல், ஏஐடியூசி மாவட்டத் தலைவர் வெ.சேவையா, க.அன்பழகன்.




துரை.மதிவாணன், ஆர்.பி.முத்துக்குமரன், பி.சுதா, கே.கல்யாணி ஆகியோர் பேரவையை வாழ்த்திப் பேசினர்.

பேரவையை வாழ்த்தி விவசாயத் தொழிலாளர் சங்க மாநிலப் பொதுச் செயலாளர் அ.பாஸ்கர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.உலகநாதன், ஒன்றியச் செயலாளர் வி.ஜவகர், நகர மக்கள் செயலாளர் பிவிசி.கார்த்தி, இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் ஜி.சரவணன், மாநிலச் செயலாளர் எம்.எஸ். கிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். நிறைவாக பி.ஜெயபால் நன்றி கூறினார்.

நெல் கொள்முதல் செய்வதில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாகம் மிக அலட்சியப் போக்குடன் செயல்படுகிறது. விவசாயிகள் கொண்டு வருகின்ற நெல்லை முழுமையாகத் தடையின்றிக் கொள்முதல் செய்ய வேண்டும், சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை கூலி உயர்வு வழங்க வேண்டும், சுமை தூக்கும் தொழிலாளர்களின் வயதுவரம்பினைக் காரணம் காட்டி வேலை வழங்க மறுக்கக் கூடாது, பணியின் போது மரணமடையும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு, பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போன்று இறப்பு நல நிதி வழங்க வேண்டும், நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தனியார்மய நடவடிக்கைகள் முற்றிலுமாகக் கைவிடப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட பல தீர்மானங்கள் மேற்கண்ட மாநாடுகளில் நிறைவேற்றப்பட்டன. இறந்த தொழிலாளர் குடும்பங்களுக்குக் குடும்ப நல நிதி வழங்கப்பட்டது.



**பி.ஜே.பி – ஆர்.எஸ்.எஸ் மதவெறி இராஜ்ஜியம்!**
**போராடிப் பெற்ற தமிழ்நாட்டு உரிமைகளுக்குப் பூஜ்ஜியம்.**
**சேலத்தில் செங்கடலென அணி திரள்வோம்!**

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து
## முதல் பக்கத் தொடர்ச்சி



பொதுவுடைமைக் கருத்தியல் என்பது மானுடத்திற்கான மறுக்க முடியாத கருத்தியல் விழுமியம் என்பதோடு, நமது மண்ணுக்கும் மக்களுக்கும் அதன் தேவை மிகவும் இன்றியமையாத ஒன்றாகத் திகழ்கிறது. அதை உணர்ந்ததால்தான் முத்தமிழறிஞர் கலைஞரின் எழுத்திலும், அரசியல் அணுகுமுறைகளிலும் அதன் சுவடுகள் அழுத்தமாகவே பதிந்திருந்தன. அந்த உணர்வோடுதான் "தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் சந்திக்காமல் போயிருந்தால் நானும் ஒரு கம்யூனிஸ்டாகத்தான் இருந்திருப்பேன்" என்று அவர் அடிக்கடி கூறினார்.

அது வெறும் அலங்காரக் கூற்றல்ல என்பதற்கான சான்றுதான் 1956ஆம் ஆண்டு நங்கவரத்தில் அவர் நடத்திய போராட்டமும், அதற்கு மக்கள் மத்தியில் கிடைத்த அமோக ஆதரவும்!

அதே உணர்வோடுதான், பின்னாளில் முதலமைச்சராகப் பதவியேற்றபோது, உழுபவருக்கே நிலம் சொந்தம், நில உச்சவரம்புச் சட்டங்களை நடைமுறைப்படுத்தினார். பொதுவுடைமைக் கருத்தை வெறும் அரசியலாக மட்டுமின்றி, மக்களின் வாழ்க்கையினையே மேம்படுத்துவதற்கான கருவியாக, சட்டத்தின் கூறுகளாக மாற்றிச் செயல்படுத்துவதுதான் அவரது ஆட்சிமுறையாகவே இருந்தது. குடிசைமாற்று வாரியம், கை ரிக்சா ஒழிப்பு உள்ளிட்ட முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசால் கொண்டு வரப்பட்ட திட்டங்களெல்லாம் பொதுவுடைமைச் சிந்தனையின் செயல்வடிவங்களே !

அவரது வழியில்தான் நமது திராவிட மாடல் அரசும் தவறாமல் பயணித்து வருகிறது. இடதுசாரி இயக்கங்கள் மீதும், தலைவர்கள் மீதும் நான் கொண்டிருக்கும் பேரன்பும், பெரும் பாசமும் நாடறிந்த ஒன்று. பல விழாக்களில் முதுபெரும் தோழர் திரு. மணலி கந்தசாமி அவர்களின் கருத்துகளை மேற்கோள் காட்டி நான் பேசுவதை நீங்கள் அறிவீர்கள். பொதுவுடைமைத் தத்துவத்தை உலகுக்குத் தந்த மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களின் சிலை சென்னையில் நிறுவப்படும் என்று அறிவித்து அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. சமத்துவம், சமதர்மத்தின் கம்பீர அடையாளமாக கார்ல் மார்க்ஸின் சிலை சென்னையில் நிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற எனது ஆவலின் வெளிப்பாடே அது!

அதுமட்டுமின்றி, நமது திராவிட மாடல் அரசு ஏழை, எளிய மக்களின் நலன்களுக்காகப் புதிய புதிய திட்டங்களை நாள்தோறும் செயல்படுத்தி வருவதையும் கண்கூடாகப் பார்த்து வருகிறீர்கள். விடியல் பயணம் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தொடங்கி, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம் உள்பட சமூகத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதி செய்திடும் வகையில், "எல்லார்க்கும் எல்லாம்" என்ற பொதுவுடைமைக் கருத்தியலை நடைமுறை வாழ்வியலாக மாற்றுவதற்கான அத்தனை முயற்சிகளையும் திராவிட மாடல் அரசு எடுத்து வருகிறது என்பதில் எனக்கு பெருமிதம் உண்டு!

இந்தியச் சமூக அமைப்பைப் பொறுத்தவரை அதிகார விடுதலை மட்டும் போதாது, வர்க்க விடுதலையும், சமூகவிடுதலையும் இணைந்ததாக இருந்தால்தான் அது முழுமையானதாக இருக்கும் என்ற அன்றைய பொதுவுடைமைத் தலைவர்களின் கருத்தும், சமூகநீதி இயக்கமாக வழிவந்த திராவிட இயக்க முன்னோடிகளின் சிந்தனையும் எத்தனை தீர்க்கமானது என்பதை இன்றுவரை அனுபவரீதியாக உணர்ந்து வருகிறோம்.

அதனால்தான், பொதுவுடைமை இயக்கமும்; திராவிட இயக்கமும் இந்த இருபெரும் விடுதலைக்காக இரட்டைக் குழல் துப்பாக்கிளாக இன்றுவரை இயங்கி வருவதையும் நாம் அறிவோம்.

இத்தகைய ஆழமான வரலாற்று உண்மையை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னெடுப்புடன் கவிஞர் திரு. ஜீவபாரதி அவர்கள் வடித்துள்ள இந்நூல், இந்த மண்ணின் சிந்தனையைச் சிவப்பாக்கிய 'தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் தோழர் சிங்காரவேலர்' முதல் 'மேடைத் தமிழுக்கு மேன்மை சேர்த்த தா.பாண்டியன்' வரையிலான நூறு கம்யூனிஸ்ட் தலைவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளை இரு பாகங்களாகஇன்றையதலைமுறைக்கு எடுத்து இயம்புகிறது.

தோழர்கள் சங்கரய்யா, நல்லகண்ணு போன்று இன்றைய தலைமுறையினர் பார்த்து வியந்த தலைவர்கள் முதல், தோழர்கள் பி.சீனிவாசராவ், பி.ராமமூர்த்தி, கல்யாணசுந்தரம், பாலதண்டாயுதம், மணலி கந்தசாமி போன்ற பிரபலமான முந்தைய தலைவர்களின் வரலாறும், கம்யூனிஸ்ட் தோழர்கள் மட்டுமே அறிந்த இயக்கத்தின் வேரில் ரத்தம் சொரிந்து செவ்வியக்கம் வளர்த்த செம்மல்கள் பலரின் தியாகவாழ்வின் சிறப்பும் இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நூல் பொதுவுடைமை இயக்கத்திற்கு மட்டுமின்றி, பொதுச் சமூகத்திற்கும் வழிகாட்டக் கூடிய மிகப்பெரிய ஆவணமாக இருக்கும் என்பதில் அய்யமில்லை. இந்தத் தருணத்தில், இந்த நூலில் இடம்பெற்றுள்ள பொதுவுடைமை இயக்கம் குறித்த கருத்துகளையும், கம்யூனிஸ்ட் தலைவர்களின் தியாகமிகு வாழ்வு குறித்த தகவல்களையும் இன்றைய தலைமுறையினரும் அறிந்திடும் வகையில், சமூக ஊடகங்கள் மூலம் பரப்பிட ஆவன செய்ய வேண்டும் என்று கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நூலை உருவாக்க வழிவகுத்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் திரு. முத்தரசன் அவர்களுக்கும், கடுமையாக உழைத்து தகவல்களைப் பதிவு செய்திருக்கும் கவிஞர் திரு. ஜீவபாரதி அவர்களுக்கும், அவருக்கு உதவிய மற்ற தோழர்களுக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'காலங்கள்தோறும் கம்யூனிஸ்டுகள்' நூலின் வெளியீட்டு விழா சிறக்கவும், அனைவரின் சிந்தனைக்கு விருந்தாகச் சென்று சேரவும் எனது உளமார்ந்த வாழ்த்துகள்!

இப்படிக்கு,

(மு.க.ஸ்டாலின்)

# காலம் தோறும் கம்
# நூல் கற்றுத்தரு

**கம்யூனிஸ்டுகள் எப்படி செயல்பட வேண்டும் என்பதற்கு முன்னுதாரணம் இங்கு வெளியிடப்பட்டுள்ள 'காலம் தோறும் கம்யூனிஸ்டுகள்' நூல். இந்த இரு நூல்களும் வரலாற்றுப் புத்தகங்கள் மட்டுமல்ல, வரலாற்றுப் பாடங்கள் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா தெரிவித்துள்ளார்.**

## பொதுச்செயலாள



இந்திய கம்யூனிச இயக்கத்தின் நூற்றாண்டையொட்டி "காலம் தோறும் கம்யூனிஸ்டுகள்" நூல் வெளியீட்டு விழா சென்னையில் எழுச்சியுடன் நடைபெற்றது. இந்த விழாவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா தலைமை தாங்கி உரையாற்றினார். அப்போது,

"கம்யூனிஸ்டுகளுடைய வரலாறு ஒரு மகத்தான வரலாறு. இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் அமைப்புரீதியாகத் தொடங்கி இன்றைக்கு நூறு ஆண்டுகள் ஆகின்றன.

கம்யூனிஸ்ட் இயக்கம் தோன்றிய போது நாடு அடிமைப்பட்டிருந்தது. பிரிட்டிஷ், பிரெஞ்சு, போர்ச்சுகீஸ் காலனிய ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்த காலம்.

காரல் மார்க்ஸ், பிரடெரிக் ஏங்கெல்ஸ் கம்யூனிஸ்ட் அறிக்கையை எழுதினார்கள். அது ஒரு மாபெரும் இலக்கியமாகவே போற்றப்படுகிறது. உலகநாடுகளில் அது பேரிலக்கியமாகப் போற்றப்படுகிறது. ஏடறிந்த வரலாறு, வர்க்கப் போராட்டத்தின் வரலாறாகவே இருக்கிறது என்று தொடங்கி, அது முடிகிறபொழுது உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்! இழப்பதற்கு எதுவுமில்லை; அடிமைச் சங்கிலிகளைத் தவிர. வெல்வதற்கோர் பொன்னுலகம் இருக்கிறது. இப்படித்தான் கம்யூனிஸ்டு அறிக்கை முடிகிறது. இந்த கம்யூனிஸ்டு அறிக்கையை தமிழில் முதலில் மொழிபெயர்த்தவர் பெரியார்.

கம்யூனிசம் என்று சொல்லுகிறபொழுது அது ஒரு வாழ்க்கை நெறி. அக வாழ்க்கையிலும், புற வாழ்க்கையிலும் நாம் எப்படி வாழ வேண்டும் என்பதற்கான நெறிகளை கம்யூனிசம் போதிக்கிறது. கம்யூனிஸ்டுகள் தங்களுடைய சுக, துக்கங்களைப் பொருட்படுத்துவதில்லை. அவர்களுடைய நோக்கமெல்லாம், மக்களுடைய சுக, துக்கங்கள். நாட்டினுடைய சுக, துக்கங்கள். மக்களை எப்படி விடுவிப்பது, நாட்டை எப்படி விடுவிப்பது காலனியாதிக்க காலத்தில் தொடங்கப்பட்ட கட்சிதான் முழுமையான சுதந்திரம் என்று பேசியது. பூரண சுயராஜ்யம் (முழு விடுதலை) என்பதை முன்வைத்தது கம்யூனிஸ்ட் இயக்கம் என்பதைநான் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காலனியாதிக்கம் ஒழிய வேண்டும், மக்களைப் பிளவுபடுத்தி, ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கி இருக்கிற இந்தச் சமூகம் மாற வேண்டும் என்று போராடுபவர்கள் கம்யூனிஸ்டுகள்.

இந்திய சமூகம் வெறும் வர்க்கங்களால் மட்டுமான சமூகம் அல்ல, சாதிகளால், மதங்களால் பிளவுபட்டிருக்கிற சமூகம். ஏழை, பணக்காரன் என்று பிளவுபட்டிருக்கிற சமூகம். இந்தச் சமூகத்தை மாற்றுவது எப்படி?

இந்தக் கேள்வி மார்க்ஸ் காலத்திலேயே எழுந்தது. உலகத்தைப் பல்வேறு கோணங்களில் பலரும் வியாக்கியானம் செய்கிறார்கள். அதை மாற்றுவது எப்படி? என்பதுதான் மார்க்ஸ் முன்வைத்த கேள்வி. மாற்றம், மாற்றுவதற்கான போராட்டம், அதற்கான ஓர் அமைப்பு என்று வருகிறபொழுதுதான் நாம் யோசிக்க வேண்டும்.

கம்யூனிஸ்டுகள் சித்திரவதை செய்யப்படலாம், சிறைச்சாலைக் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படலாம், தூக்குக் கயிற்றில் தொங்கவிடப்படலாம், துப்பாக்கிக் குண்டுகள் அவர்களுடைய உடல்களைத் துளைக்கலாம். கம்யூனிஸ்டுகள் கொல்லப்படலாம். ஆனால், கம்யூனிஸ்டுகள் தோற்பதில்லை, தோற்கடிக்கப் படுவதில்லை.

இந்தியாவில் முதல் சதி வழக்கை சந்தித்த இயக்கம் கம்யூனிஸ்டு இயக்கம்தான். கான்பூர் சதி வழக்கு. அங்குதான் கட்சித் தொடங்கப்பட்டது.

மீரட் சதி வழக்கு, லாகூர் சதி வழக்கு, பெஷாவர் சதி வழக்கு. எத்தனை சதி வழக்குகள் கம்யூனிஸ்டுகள் மீது போடப்பட்டன. அவற்றை எல்லாம் சந்தித்துதான் கம்யூனிஸ்டுகள் நாட்டினுடைய விடுதலைக்காகப் போராடினார்கள்.

சென்னை நகரத்தைச் சார்ந்த சிங்காரவேலர்தான் கம்யூனிஸ்டு கட்சியினுடைய முதல் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். அவர்தான் அரசியல் விடுதலை மட்டுமல்ல சமூக விடுதலையும் வேண்டும் என்றார். தீண்டாமையில் இருந்து மக்கள் விடுவிக்கப்பட வேண்டும், சாதிக் கொடுமைகளில் இருந்து மக்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று பேசினார். இந்தியாவில் இந்தப் பிரச்சினைகளை இன்றைக்கும் எதிர்கொண்டிருக்கிறோம்.

சாதி ஏன் இன்றும் இருக்க வேண்டும்?

இந்தியாவில் எந்தப் பக்கம் திரும்பினாலும், அங்கே ஒரு பிசாசு இருக்கிறது. சாதி என்ற அந்தப் பிசாசைக் கொல்லாமல், பொருளாதார சுதந்திரம், அரசியல் சுதந்திரம் பற்றி பேசிப் பயனில்லை. இதைச் சொன்னவர் டாக்டர் அம்பேத்கர்.

இதையேதான் தமிழ்நாட்டில் பெரியார் பேசினார். தீண்டாமை

# ...யூனிஸ்டுகள் ...ம் பாடம்

## ...ர் டி.ராஜா எழுச்சியுரை

ஒழிய வேண்டும். சாதியம் ஒழிய வேண்டும். சமூக சீர்திருத்தம் ஏற்பட வேண்டும். பகுத்தறிவு வளர வேண்டும். அந்த பகுத்தறிவு என்ன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இதைப் பெரியார் சொல்வதற்கு என்ன காரணம்? இன்றைக்கு மனித மனமே மூடப்பழக்க வழக்கங்களால், விஞ்ஞானத்திற்குப் புறம்பான கருத்துகளால் பாதிக்கப்பட்டிருக்கிறது. மனித மனம் விடுதலை பெற வேண்டும். இது இன்றைக்கு பெரும் பிரச்சினையாக வந்திருக்கிறது.

இந்தச் சூழலில்தான் இந்தியாவில் கம்யூனிஸ்டுகள் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதை இங்கு வெளியிடப்பட்டுள்ள இரண்டு தொகுதி நூல்களில் சொல்லப் பட்டிருக்கிறது. இங்கே தோழியர்கள் நிரம்ப இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். இரண்டு நூல் தொகுதிகளையும் நீங்கள் வாங்குங்கள். செங்கொடி காத்த சிகப்பி பற்றிப் படியுங்கள். ஒரு பெண் எப்படி செங்கொடிக்காக தன்னுடைய உயிரைப் பணயம் வைத்து செங்கொடியைப் பிடித்து நின்றாள் என்பதை விவரிக்கிறது.

டாக்டர் அம்பேத்கர் எழுதிய அரசியலமைப்புச் சட்டம் இருக்கிறது. இந்தியாவை 'யுனைட்டட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா' (United States of India) அதாவது இந்திய ஒன்றியம் என்று குறிப்பிட வேண்டும் என்றவர் அம்பேத்கர்.

மத்தியில் இருப்பது ஒன்றிய அரசு. அதை ஒற்றைப் பரிமாண ஆட்சி என்று மோடி நினைத்துக்கொண்டிருக்கிறார். இந்திய அரசு ஒரு ஒற்றைப் பரிமாண அரசு அல்ல. பல்வேறு மொழிகள், பல்வேறு கலாசாரங்கள், பல்வேறு சரித்திரப் பின்னணிகளைக் கொண்ட ஒரு நாடு. பெரும் வேறுபாடுகளைக் கொண்ட நாடு. இதை அங்கீகரிக்காமல் இந்தியாவை நாம் முன்னெடுத்துச் செல்ல முடியாது.

இப்பொழுது நாடாளுமன்றம் செயல்படுவது அரிதாக இருக்கிறது. நாடாளுமன்ற ஜனநாயகத்தையே கவிழ்க்க வேண்டும் என பாஜக, ஆர்எஸ்எஸ் முயன்று கொண்டிருக்கிறது. நாடாளுமன்றம் செயலிழந்தால் என்ன ஆகும்?

இட்லர் காலத்தில் இதுதான் நடந்தது.

இட்லர் தொடுத்த முதல் தாக்குதலே ரீய்ஸ்டாக் என்ற நாடாளுமன்றத்தை தீயிட்டு எரித்து இல்லாமல் செய்ததுதான்.

இப்பொழுது பாஜக, ஆர்எஸ்எஸ் நாடாளுமன்றத்தை செயல்படவிடாமல் முடக்கி, நாடாளுமன்ற ஜனநாயகத்தையே ஒழித்துக்கட்ட நினைக்கிறார்கள்.

எனவே, ஜனநாயகத்தை எப்படிக் காப்பாற்றப் போகிறோம்?

அரசியலமைப்புச் சட்டத்தை எப்படிக் காப்பாற்றப் போகிறோம்?

இவைதான் நம்முன்னால் இருக்கும் பெரும் கேள்விகள்.

இன்றைய இந்தியச் சூழலில், தமிழகச் சூழலில் புரட்சியை நாம் முன்னெடுத்துச் செல்லவேண்டுமானால் கம்யூனிஸ்டுகள், அம்பேத்கரிஸ்டுகள், பெரியாரிஸ்டு அனைவரும் ஓரணியில் நின்று போராட வேண்டும். இதுதான் இன்றைய காலத்தின் தேவை.

இன்றைக்கு காசாவில் என்ன நடக்கிறது? உணவு கிடைக்காமல் இரண்டு வயது, மூன்று வயது குழந்தைகள் தட்டினை ஏந்தி அவதி அடைகின்றனர். பட்டினிக் கொடுமைக்கு ஆளாகி செத்து மடிகின்றனர்.

உலகம் ஒரு குடும்பம் என்று பேசுகிற இந்தக் காலத்தில் காசாவில் குழந்தைகள் ஏன் சாக வேண்டும்? இந்தக் கொடுமைக்கு எங்கே முற்றுப்புள்ளி வைப்பது? எனவே போரற்ற உலகம், பசியற்ற உலகம், ஒரு புதிய உலகம் அமைய வேண்டுமானால், கம்யூனிஸ்டுகள் தியாக உணர்வோடு தங்கள் போராட்டத்தைத் தொடர வேண்டும் என்பதுதான் இந்த நூல்கள் நமக்கு சொல்லிக் கொடுக்கிற பாடம்" என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா உரையாற்றினார்.

**- கதிரவன்**

# கம்யூனிஸ்டுகளின் தியாகத் தழும்புகள் வழிநடத்தும்

## அமைச்சர் தங்கம் தென்னரசு உருக்கம்

'காலம் தோறும் கம்யூனிஸ்டுகள்' நூல் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. இதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொள்ள இயலாததால், அவர் சார்பாக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு கலந்துகொண்டு நூலின் இரண்டு தொகுதிகளையும் வெளியிட்டு சிறப்புரையாற்றினார். அப்போது,

"இந்த நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு நூலை வெளியிட முதலமைச்சர் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். மருத்துவர்களின் அறிவுரையால், இந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் கலந்துகொள்ள இயலாத சூழலில், அவர் சார்பாக நான் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

காமராசர் அரங்கம் நிரம்பி வழிகிறது. மேடையிலிருந்து பார்க்கும் போது, "எங்கெங்கு காணினும் சக்தியடா" என்ற வரிகளுக்கு ஒப்ப, எல்லாம் சிகப்பு மயமாக காட்சியளிக்கிறது. சிவப்புத் துண்டுகளாக பரிணமித்திருக்கிறது.

தோழர் டி.ராஜா அவர்கள் தனது தலைமை உரையில், "நாம் அனைவரும் ஓர் அணியாக திரண்டு நிற்க வேண்டும், அதற்கான காலம் வந்திருக்கிறது" என்று கூறினார். நான் இந்த அரங்கத்தைப் பார்க்கிற போது, அதைப் பரிபூரணமாக உணர்கிறேன். கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்கள், அந்த இயக்கத்தின் தோழர்கள், கழகத்தின் சார்பில் நான், காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் செல்வப் பெருந்தகை, முஸ்லிம் லீக் இயக்கத்தின் சார்பில் பேராசிரியர் பெருந்தகையார் உட்பட பல்வேறு இடதுசாரிய, பெரியாரிய, அம்பேத்கரிய முன்னணி தோழர்கள், இலக்கிய ஆர்வலர்கள், சிந்தனையாளர்கள் நிரம்பி இருக்கிறார்கள். மதச்சார்பற்ற கொள்கையில் பற்றுக் கொண்டிருக்கும் அத்தனை பேரும் இங்கே நிரம்பி இருக்கிறார்கள். ஓர் அணியாக குழுமி, இந்த அரங்கை நிரப்பி இருக்கிறார்கள். நம்மையெல்லாம் ஒரு குடையின் கீழ் திரட்டி இருப்பது காமராஜர் அரங்கம் என்பதால் எனக்கு மகிழ்ச்சி.

மாற்றம் ஒன்றுதான் மாறாதது என்பதை நாம் கணிதத் தத்துவமாக அறிவோம். ஆனால் பொதுவாழ்வில் நூற்றாண்டுகளைக் கடந்த போதும், மாறாத வாழ்க்கை முறை என்பது கம்யூனிஸ்டுகளுடையது என்பதையும் நாம் அறிவோம்.

கம்யூனிசம் என்பது சாதாரண மக்களுக்காக, அடிப்படை மக்களுக்காக, உழைக்கும் வர்க்கத்திற்காக உருவாக்கப்பட்ட தத்துவம். அதன் தேவை என்றைக்கும் தீர்ந்து போவதில்லை, அவர்களின் குரல் இந்தப் பூமிப் பந்தில் என்றென்றைக்கும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

இந்த நூலுக்கு தோழர் முத்தரசன் அவர்கள் அருமையான முன்னுரை எழுதி இருக்கிறார். பாயிரம் அல்லது பனுவல் என்று தமிழ் இலக்கியத்திலே சொல்லி இருக்கிறார்கள். பாயிரம் என்ற வார்த்தையை முன்னுரை என்று எடுத்துக் கொண்டால், இந்த நூலுக்கு ஒரு மிகச் சிறப்பான முன்னுரையை தோழர் முத்தரசன் எழுதி இருக்கிறார்.

அந்த முன்னுரையில் ஓரிடத்தில் சுயராஜ்யம் நமக்கு கிடைத்திருக்கலாம் ஆனால், சுகராஜ்யம் கிடைத்ததா? என்ற கேள்வியை எழுப்பி இருக்கிறார். அது இன்னமும் நமக்கு கேள்விக்குறியாக இருக்கிறது. அந்த சுகராஜ்யம் நமக்கு கிடைத்தே தீர வேண்டும் என்பதற்காகத்தான் ஆயிரமாயிரம் கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர்கள், தங்கள் இன்னுயிரை தியாகம் செய்திருக்கிறார்கள். தங்களுடைய சொந்த வாழ்க்கையில் பல்வேறு துயரங்களை அனுபவித்திருக்கிறார்கள். தங்கள் சொத்து, சுகங்களை இழந்திருக்கிறார்கள்.

இந்த நூலில் நூறு பேரை எடுத்துக் கொண்டு, அவர்களைப் பற்றி எழுதி இருக்கிறார்கள். சிங்காரவேலரில் தொடங்கி, மதுரை மாரி, மணவாளன் வரை தொட்டு 100 பேரின் தியாக வரலாற்றை, மிகச் சிறப்பான நூலாக நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட்டிருக்கிறது. தொகுத்துக் கொடுத்த ஜீவபாரதி அவர்களுக்கு வாழ்த்துகள்.

தோழர்களின் தியாக வாழ்க்கையை நாம் அறிந்து கொள்ள வேண்டும். நமக்கு முன்னர் எத்தனை தோழர்கள் தியாக வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நாம் முன்னேறி செல்ல வேண்டிய பாதையின் கோடுகள் நமக்கு தீர்மானமாக தெரியும்.

மகாத்மா காந்தி மறைவுற்ற போது, "இப்படிப்பட்ட மனிதர் நம்மிடத்தில் வாழ்ந்தார் என்பதை, நமக்குப் பின்னால் வரக்கூடியவர்கள் நம்பவும் மறுப்பார்கள்" என்று ஐன்ஸ்டீன் சொன்னார்.

இந்தப் புத்தகத்தைப் புரட்டிப் பார்க்கிற போது, இப்படிப்பட்ட மனிதர்கள் வாழ்ந்திருக்கக்கூடிய சமூகத்தில், நாமும் வாழ்ந்திருக்கிறோம் என்ற பெருமையை பெற்றிருக்கிறோம்.

இவர்களில் பலரை நாம் பார்த்ததில்லை, சிலரோடு சமகாலத்தில் வாழ்ந்து இருந்திருக்கிறோம். தியாகத் தலைவராக இருக்கக்கூடிய மரியாதைக்குரிய இரா.நல்லகண்ணு, தோழர் தா.பாண்டியன், ஐயா சங்கரய்யா போன்றவர்கள் வாழ்ந்த காலத்தில் நாம் அறிந்திருக்கிறோம். இந்நூலில் உள்ள இன்னும் பலரை நாம் அறிந்திருக்கிறோம்.

தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். ஒரு தென்னை மரத்தை நாம் பார்க்கிற போது, அந்த தென்னை மரத்தில் இருக்கக்கூடிய மட்டைகள் எல்லாம் ஒவ்வொன்றாக விழுந்த போதும், அதன் தழும்புகள் அப்படியே இருக்கும். பின்னால் வரக்கூடியவர்கள், இந்தத் தழும்புகளைத் தொட்டுத் தான் மேலே ஏற முடியும் என்ற நிலையை அது உருவாக்கி இருந்தது. அப்படித்தான் நமது தோழர்கள்,

அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை, செய்த தியாகம் இன்றைக்கும் நமக்கு வழிகாட்டியாக, நம்மையெல்லாம் வழிநடத்தக் கூடியதாக விளங்கி வருகிறது.

எத்தனையோ பேருடைய வாழ்க்கை நமக்கு வழிகாட்டியாக



இருக்கிறது. இந்தப் புத்தகத்தைப் படித்த போது, பல வரலாறுகள் நெஞ்சைத் தொட்டன. ஜாம்பவன் ஓடை சிவராமனை சுட்டுக் கொள்வதற்காக அழைத்துச் சென்ற போது, அவரை நைச்சியமாக பேசி, நயவஞ்சமாகப் பேசி, நீ இளைஞனாக இருக்கிறாய், எனவே இங்கிருந்து நீ சென்று விடு என்று சொல்கிற போது, கம்யூனிஸ்டுகளுக்கு உரிய நெஞ்சுரத்தோடு அவர் திருப்பிச் சொல்லுகிறார். "நான் திரும்பிச் சென்றால், என்னுடைய முதுகில் சுட்டுக் கொல்வீர்கள் என்பதை அறிவேன். நீங்கள் என்னைச் சுடுவதாக இருந்தால் என் நெஞ்சிலேயே சுடுங்கள், நான் தயாராக இருக்கிறேன்" என்று சொல்லி இருக்கிறார். ஒரு மாவீரனாக நான் அவரை கண்டேன்.

இங்கே தேசிய விடுதலை இயக்கத்தைப் பற்றிப் பேசினார்கள். செங்கொடி காத்த சிகப்பியைப் பற்றி பொதுச்செயலாளர் டி.ராஜா பேசினார். செங்கொடி காத்த சிகப்பி மகளிரின் தியாகத்திற்கு மிகச் சிறப்பான உதாரணம் என்பதை அறிய முடிகிறது.

இந்த நூலின் முன்னுரையைப் படிக்கிற போதும் சரி, நூலைப் படிக்கிற போதும் சரி, மணலி கந்தசாமி அவர்களுடைய வாழ்க்கையை, அவருடைய தியாகத்தைப் படிக்கிற போது நான் உறைந்து போனேன். அவரது தியாகத்தைப் பற்றி எங்களது தோழர்களுக்கு அடிக்கடி எடுத்துச் சொல்வோம்.

1971 இல் விவசாயிகளுக்கான அனுபவ போக சட்டத்தை கலைஞர் அவர்கள் கொண்டு வந்து, ஒரு லட்சத்து 25 ஆயிரம் பேருக்கு கொடுத்தார். அப்போது, ஆயிரக்கணக்கானோர் ரத்தம் சிந்தி சாதிக்க முடியாத காரியத்தை, கலைஞர் அவர்கள் ஒரு துளி பேனா மையால் சாதித்து விட்டார் என்று மணலியார் சொன்னதை பெருமையோடு கலைஞர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மணலியார் குடும்பம் எத்தகைய தியாகத்தை செய்திருக்கிறது. அதற்கு ஈடு இணையே கிடையாது. அப்படிப்பட்ட தியாக சீலர்கள் நிரம்பி இயக்கம் இது. அந்த தியாகச் சீலர்களுக்கு உங்கள் சார்பில், என்னுடைய சார்பில் நன்றியை காணிக்கையாகுகிறேன்.

இந்த அரங்குக்கு வந்து உங்களிடத்தில் உரையாற்றி இருக்க வேண்டிய நம்முடைய முதலமைச்சரின் சார்பில், என்னுடைய நெஞ்சார்ந்த, செம்மார்ந்த வீரவணக்கத்தை நான் வணங்கித் தெரிவித்துக் கொள்கிறேன்" என்ற அமைச்சர் தங்கம் தென்னரசு, முதலமைச்சரின் வாழ்த்துக் கடிதத்தை முழுவதும் படித்து, இரா.முத்தரசனிடம் ஒப்படைத்தார்.

# கம்யூனிஸ்ட் கட்சியின் சிறப்பு எது தெரியுமா?

## கவிப்பேரரசு வைரமுத்து சிறப்புரை

**“இந்த இரண்டு தொகுப்புகளில் நிறைந்திருப்பது என்ன தெரியுமா? தியாகம் தியாகம் மட்டும்தான். தியாகம் இல்லாத இலக்கியங்கள் வெற்றிபெறுவதில்லை. தியாகம் இல்லாத போர்க்களம் நிறைவு பெறுவதில்லை” என்று கவிப்பேரரசு வைரமுத்து பலத்த கரவொல்லிக்கு இடையே கூறினார். இந்த நூல் வெளியீட்டு விழாவில் அவர் ஆற்றிய உரை வருமாறு :**



இந்திய வரலாற்றில் பெருமை பிரிட்டிஷ் பேரரசின் கீழும், இந்தியப் பேரரசின் கீழும் கம்யூனிஸ்ட் கட்சியைப் போல் காயப்படுத்தப்பட்ட கட்சி இந்தியாவில் இல்லை. என்பதில் இரண்டு கருத்து இன்றி எந்த நிலையிலும் சொல்லலாம். அதற்குக் காரணம் ரஷ்யப் புரட்சி. 1917 இல் ஆகா வென்று எழுந்தது பார் யுகப் புரட்சி. ரஷ்ய புரட்சிக்குப் பிறகு பிரிட்டிஷ் அரசு பயந்தது. காங்கிரசைப் பார்த்து அல்ல கம்யூனிஸ்ட் கட்சியைப் பார்த்து. காங்கிரஸ் பார்த்து பயப்படாத பிரிட்டிஷ் பேரரசு கம்யூனிஸ்ட் கட்சியைப் பார்த்து அஞ்சியது. ரஷ்யாவில் மாகாளி கடைக்கண் வைத்தாள் என்று பாரதி பாடினானே அந்த புரட்சி ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள்தான் முடியும் என்பதால் பிரிட்டிஷ் பேரரசு கம்யூனிஸ்ட் கட்சியைப் பார்த்துப் பயந்தது. அதனால்தான் அதன் மீது தடை விதித்தது.

வசீகரமான கட்சி, வளர்கிற கட்சி, மக்களைச் சேர்ந்த கட்சி, உணர்ச்சியும் உழைக்கும் தலைவர்களைக் கொண்ட கட்சி, வெல்லக்கூடிய சித்தாந்தத்தை உடைய கட்சி, இந்தக் கட்சி இந்தியாவில் பரவினால் பிரிட்டிஷ் அரசுக்கு மாத்திரம் அல்ல இந்தியாவின் அடிப்படைக்கே கூட வேறொரு புதிய கோணம் வந்துவிடும் என்று அஞ்சியது பிரிட்டிஷ் அரசு.

வாழை நிலைக்குது சோலை தழைக்குது
ஏழைகளுக்கதில் என்ன கிடைக்குது
கூழைக்குடிக்குது; நாளைக் கழிக்குது
ஓலைக்குடிசையில் ஒட்டிக்கிடக்குது

என்ற விளக்கத்தோடு வெளிவந்தவன் மக்களோடு மக்களான உழைக்கும் மக்களை அறிந்தான். எனவே இந்தக் கட்சி இந்தியாவில் ஒரு புரட்சியை, மாற்றத்தை, அடிப்படையைத் தகர்க்கக் கூடிய ஒரு புதிய சித்தாந்தத்தைக் கொண்டிருக்கிறது என்பதனால் மறுக்கப்பட்டது, ஒடுக்கப்பட்டது, தகர்க்கப்பட்டது. உண்மையாகச் சொல்லப் போனால் இந்த வார்த்தையை நான் தெரிந்து பயன்படுத்துகிறேன் வேட்டையாடப்பட்டது. இத்தனை வேட்டைகளுக்குப் பிறகும் இத்தனை எதிர்ப்புகளுக்குப் பிறகும், இத்தனை ஆயுதங்களுக்குப் பிறகும் இத்தனை சட்டங்களுக்குப் பிறகும் துப்பாக்கிகளுக்கும் தோட்டாக்களுக்கும் தூக்கு மேடைகளுக்குப் பிறகும் நிலைத்து நிற்கிற ஒரு கட்சி. உண்மையானவர்கள் இதயத்தில் கட்சி நிலை பெற்று விட்டது.

கம்யூனிசம் என்கிற தத்துவம் இந்த மண்ணில் மட்டுமல்ல அகிலம் முழுக்க நிலைபெறும் என்ற நம்பிக்கையோடுதான் இன்றைய இளைஞனும் நாளைய இளைஞனும் திகழ்வான் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. இதற்குப் போராடியவர்களின் கதைகள்தான் இந்தக் காலம் தோறும் கம்யூனிஸ்டுகள் என்ற இரண்டு பகுதிகளின் கதை.

இந்நிகழ்ச்சிக்கு வந்தது உங்களுக்கு ஒரு வரலாறு. நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டது உங்களின் வாழ்வியல் கௌரவம். இந்தக் கம்யூனிஸ்ட் கட்சி நூற்றாண்டு காணக்கூடிய தருணத்தில் பாடுபட்ட நூற்றுவரின் வரலாற்றுப் பதிவு பெற்ற காலகட்டத்தில் காமராஜர் அரங்கத்தில் நான் ஒரு மூலையில் இருந்தேன், ஒரு நாற்காலியில் இருந்தேன் என்பதுதான் உங்களின் வாழ்க்கையில் வரலாறு. கட்சியில் இதுவரை நீங்கள் பார்வையாளராக இருந்தாலும் இன்று முதல் பங்குதாரர்களாக மாறுகிறீர்கள்.

இந்த இரண்டு தொகுப்புகளில் நிறைந்திருப்பது என்ன தெரியுமா? தியாகம் தியாகம் மட்டும்தான். தியாகம் இல்லாத இலக்கியங்கள் வெற்றிபெறுவதில்லை. தியாகம் இல்லாத போர்க்களம் நிறைவு பெறுவதில்லை. தியாகம் இல்லாத இதிகாசம் படிக்கப்படுவதில்லை. தியாகம் இல்லாத குடும்பம் வளம் பெறுவதில்லை. தியாகம் இல்லாத கட்சி வாழ்வதில்லை. தியாகத்தின் அடிப்படையில் விளங்குவது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி. ஒரு செய்தி இங்கு சொல்லட்டுமா உங்கள் கர ஒளியைக் கேட்கிற போது, கண்களைப் பார்க்கிறபோது, உங்கள் உணர்ச்சிகளை உடல் உள்வாங்குகிற போது, உங்களுடைய உணர்ச்சியும் ஆயிரம் பாம்புகள் புற்றுக்கு மேலே தலையெடுத்துச் சென்று கொண்டாடுவது போன்ற தோற்றத்தைப் பார்க்கிற போது பேசு, வைரமுத்து பேசு என உள்ளம் துடிக்கிறது. ஆனால் அளந்து பேச வைரமுத்து என்று காலம் தவிக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சியின் பெரிய விஷயம் என்ன தெரியுமா? குடும்பமே கம்யூனிஸ்ட் குடும்பமே தியாகம் குடும்பமே அந்த கருத்துக்கு உடன்பாடு. கம்யூனிஸ்ட் மட்டும் தன் குடும்பத்தையே கம்யூனிஸ்ட் ஆக மாற்றி இருப்பார். அவன் உதிரத்தில் அவன் நரம்பில் அவன் சதையில் அணுக்களில் அது ஓடிக்கொண்டிருக்கும். மணலி கந்தசாமி தலைமறையாக இருக்கிறார். இயக்கம் தடை செய்யப்பட்டு விட்டது. அவ்வப்போது மனைவியை மட்டும் வந்து பார்த்துச் செல்கிறார்.

யாருக்கும் தெரியாது காவல்துறையைக் கண்டுபிடிக்க முடியவில்லை சுற்றத்திற்குத் தெரியாது ஊருக்கு தெரியாது தெருவுக்கு தெரியாது வந்துட்டுப் போகிறார் கண்டுபிடிக்க முடியவில்லை காவல்துறை மனைவியைக் கைது செய்தது. இதுவரைக்கும்தான் தங்கம் சொன்னார் மிச்சத்தை வைரம் சொல்கிறேன்.

நீதிமன்றத்தில் கேட்கிறார்கள், உங்கள் கணவரை எப்போது பார்த்தீர்கள்? பார்க்கவில்லை. எவ்வளவு நாளாச்சு பார்த்து? பல மாதங்கள் ஆயிடுச்சு. பார்க்கவே இல்லை, பார்க்கல. வரவே இல்லை. பிறகு எப்படி கர்ப்பமாக இருக்கிறீர்கள்.

அந்த ஆ ஒன்று போதும் ஆயிரம் அர்த்தம் சொல்லும் ஒருவர் சொன்ன குரலில் ஒட்டுமொத்த இயக்கத்தின் வலி தெரிகிறது.

மணலி கந்தசாமி மனைவியாகிய மாதரசி மீது வீசப்பட்டது. எப்படி கர்ப்பமான? என் கர்ப்பத்திற்குக் காரணம் என் கொழுந்தனார். சொல்லியது பொய், உண்மைக்குப் புறம்பானது. பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த

நன்மை பயக்கும் எனின்.

திருவள்ளுவனுக்கு அதற்குப் பொருள் தெரியாது. மணலி கந்தசாமி மனைவிக்குத் தெரியும்.

நான் பொய் சொல்கிறேன். இந்தப் பொய் என் மானத்தைச் சிதைக்கிறது. ஆனால் கட்சியைக் காப்பாற்றுகிறது. என் தலைவனைக் காப்பாற்றுகிறது. மானம் பெரிதா கட்சி பெரிதா உயிர் பெரிதா உயிரை விட மானத்தை விட கட்சி பெரிது. லட்சியம் பெரிது என்று கருதுகிற மாதரி சிகளை கொண்டது இந்த இயக்கம்.

பாலுவின் கதை தெரியுமா? இதில் பதிவாகியுள்ளது.

ஜீவ பாரதியை நான் பெரிதும் பாராட்டுகிறேன். தூக்கு மேடை பாலு. உசிலம்பட்டியில் ஆர்வி மில்லில் வேலை பார்த்தார். செண்பகம் சேவை என்கிற ஏட்டு கம்யூனிஸ்டுகளை எதிர்க்கிறார் என்பதற்காக கொலையுண்டு போனார். கொலை செய்யப்பட்ட பழி பாலுமற்றும் ஆறு பேர் மீது விழுந்தது. அந்த ஏழு பேர் மீது விழுந்த பழி விசாரணைக்கு வந்த போது 6 பேருக்கு ஆயுள் தண்டனை தூக்கு மேடை பாலுவுக்கு மட்டும் தூக்கு தண்டனை. ஒருவனுக்கு மட்டும் தூக்கு தண்டனை. விடிந்து விடியாத பொழுது முடிந்தும் முடியாமல் போகப்போகிறது ஒரு உயிர். அவனைக் கொட்டடியிலிருந்து அழைத்துச் செல்கிறார்கள்.

வேதம் சொல்கிறது மனிதன் மனிதன் சாவுக்கு அஞ்சுவதில்லை, வேறு எதற்கு அஞ்சுகிறான். மரண அவஸ்தைக்குத்தான் அஞ்சுகிறான். நெஞ்சு நிமிர்த்திக் கொட்டடிக்குப் போகிறார். போகிறபோது கொட்டடியில் இருந்த கைதிகள் கத்துகிறார்கள். வாழ்க பாலு! பாலு வாழ்க! வாழ்க பாலு! பாலு வாழ்க! போதும் என்று விட்டது பாலுவுக்கு. எதற்கு வாழ்த்து, ஒரு சுத்தமான கம்யூனிஸ்ட் தனிப் புகழை விரும்ப மாட்டான்.

என் மீது என்ன புகழ் எனக்கென்ன கிரீடம். கொட்டடிகளில் நடைபெற்ற கைதிகளைப் பார்த்துச் சொன்னான். நான் விடைபெறுகிறேன் தூக்குக் கயிற்றை முத்தமிடப் போகிறேன். என் கழுத்து எலும்பு கொஞ்ச நேரத்தில் முறிக்கப்படும். என் மூளைக்குச் சேர வேண்டிய ஆக்சிஜன் அறுபட்டு போகும். ஆக்சிஜன் சேராவிட்டால் மூளை மூன்று நிமிடத்தில் மரணித்து விடும். அந்த மூன்று நிமிடங்களுக்குப் பிறகு பாலு என்பவனின் சடலம் இந்தச் சிறைக் கொட்டடியில் கிடக்கும். அப்போது நீங்கள் முழங்கப் போவது பாலு வாழ்க என்று அல்ல இன்குலாப் ஜிந்தாபாத் என்று முழக்கமிடுங்கள் என்று கூறி விட்டுத்தான் தூக்கமடைக்குச் சென்றான். துடிக்கத் துடிக்கச் செத்தான். இந்தத் துயர வரலாறு யாருக்குத் தெரியும்?

நண்பர்களே தலைவர்களின் வரலாறு தெரியும் மூத்தவர்களின் வரலாறு தெரியும் ஒரு முறை லத்தி சார்ஜ் வாங்கியவரின் அடையாளம் தெரியும். முகம் தெரியாத தியாகிகளின் கதை எங்கே? கண்ணுக்குத் தெரியாத, தொட்டுப் பார்க்க முடியாத வேர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதுதான் இந்நூலுக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி. ஒரு பெண்மணியின் கதை சொல்லி விடைபெற ஆசைப்படுகிறேன்.

பக்கத்துக் கொட்டடியில் தாய் இருக்கிறாள். இந்தக் கொத்தடியில் இளம் பெண் இருக்கிறாள். தாயும் போராளி மகளும் போராளி. இருவரும் 22 நாட்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். சென்ட்ரல் சிறையில் கொடுமைகளை எதிர்த்துப் போராட்டம் முடிவுக்கு வருவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் எல்லாம் முறியடிக்கப்பட்டு விட்டன. செய்தி வருகிறது பக்கத்து அறையில் உள்ள உன் தாய் இறந்து விட்டாள்.

அந்த இளம் பெண் கேட்கிறார், என் தாயின் முகத்தை நான் பார்க்க முடியுமா? முடியும் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு நான் நிரந்தரமாக வெளியேறுவேன் என்று எழுதிக் கொடு இறந்த உன் தாயின் சடலத்தைக்காட்டுகிறோம் எங்கிறார்கள்.

அந்தப் பெண் சொல்கிறாள் வேண்டாம் என் தாயின் முகத்தை நான் பார்க்கவே வேண்டாம். கொஞ்ச நேரத்தில் தாயின் சடலம் கடந்து போகிறது. சிறைக் கம்பிகளுக்கு உள்ளே இருந்து கடந்து போகும் சடலத்திற்கு வணக்கம் சொல்லி அழுகிறார் அந்த பெண். இறந்து போன தாயின் பெயர் லட்சுமி மறுக்கப்பட்ட பெண்ணின் பெயர் பாப்பா உமாநாத்.

இந்தத் தியாகங்கள் எல்லாம் எதற்கு? இந்தத் துன்பங்களைத் தாண்டியது எதற்கு? இந்தத் தன்னல மறுப்பு எதன் பொருட்டு? இதுதான் இப்போதுள்ள கம்யூனிஸ்ட் கட்சி மீது வீசப்படும் கேள்வி. இந்த தியாகங்களுக்கெல்லாம் என்ன பலனை அனுபவிக்கிறீர்கள்? என்ன பலனை அனுபவிக்கப் போகிறீர்கள்? இயக்கத்தை எந்த திசையில் நகர்த்தப் போகிறீர்கள்? இன்னும் என்னென்ன திட்டங்கள் வகுக்கப் போகிறீர்கள்? இதுதான் நம் முன்னோர்கள் நமக்கு செய்த மிகப்பெரிய தியாகங்களுக்கு அடையப் போகிற பலன். இந்த கேள்வியைத்தான் கம்யூனிஸ்ட் இயக்கங்களைப் பார்த்து கேட்க வேண்டியவனாக இருக்கிறேன்.

உங்களுக்கு உறவினர்கள் நாங்கள் எல்லாம் உங்களது தோழர்கள் எங்கள் இதயத்திலும் பல எண்ணங்கள் உண்டு. காலம் திரை போட்டு வைத்திருக்கிறது. காலம் மூடி போட்டு வைத்திருக்கிறது. வெல்க பொதுவுடமை! வாழ்க கம்யூனிஸ்ட் கட்சி’’ இவ்வாறு கவிப்பேரரசு வைரமுத்து உரையாற்றினார்.

**– பச்சோ**

### ஜீவபாரதிக்கு ரூ. 1 லட்சம்

“ஜீவ பாரதியின் மீது எனக்குத் தனி காதலே வந்துவிட்டது. அவர் ‘காலம் அறிந்து கூவிய சேவல்’ என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தைப் பற்றி எழுதிய நூல் தமிழில் முக்கியமான நூல். இந்தக் காலம் தோறும் கம்யூனிஸ்டுகள் இரண்டு நூல்களும் காலத்தின் பெட்டகங்கள். இது கம்யூனிஸ்ட் மாத்திரமல்ல தமிழர்கள் எல்லாரும் வாங்கிப் படிக்க வேண்டும். தேடித் தேடி கொங்குதேர் வாழ்க்கை அஞ் சறை தும்பியாய்த் தேடித் தேடி எழுதிய ஜீவபாரதிக்கு என் சார்பிலும் ஒரு லட்ச ரூபாய் பரிசு கொடுக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.” இவ்வாறு அறிவித்த கவிப்பேரரசு வைரமுத்து அதற்கான தொகையை மாநிலச் செயலாளர் முத்தரசனிடம் ஒப்படைத்தார்.

# மரக்கால் கூறும் வரலாறு 2



ஆ.சிவசுப்பிரமணியன்

கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளரும், காங்கிரஸ்காரருமான டி.எஸ்.சொக்கலிங்கம் தாம் நடத்திவந்த 'தினசரி' நாளேட்டில் தஞ்சை ஜில்லா தொல்லை 'என்ற தொடரை 1948 இல் எழுதி வந்தார். அதில் 'ஹரிஜனங்கள் படும் பாடு 'என்ற உபதலைப்பில் அவர் எழுதியுள்ள செய்தி வருமாறு: (தினசரி:1948ஜூலை7பக்கம்3)

“எங்களுடையஉழைப்பினாலேகிடைத்த வெண்ணெயையும் பாலையும் குடித்துவிட்டு 4 கலத்தை 2கலம் என்று அளந்து எடுத்துக் கொண்டு போகும்ஆண்டை போனமாசமே இறந்து போய்விட்டார்” என்று யாரோ ஒரு மிராசுதாரைக் குறிப்பிட்டு ஒரு ஹரிஜன் என்னிடம் பேச்சுவாக்கில் கூறினார்.தங்களை நசுக்குபவரகள் சாவில்கூட திருப்தியடையக் கூடிய அளவுக்கு வெறுப்பு தோன்றி யிருக்கிறது(தினசரி1948ஜூலை7பக்கம்3).

நன்செய்நிலப் பகுதியில் மட்டுமின்றி புன்செய்நிலப்பகுதியிலும் இச்சுரண்டல் நிகழ்ந்துள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தின் கரிசல் நிலப்பகுதியில் கேழ்வரகு தானியத்தைக் கூலியாகப் பெற நெடுநேரம் காத்திருக்கும் விவசாயத் தொழிலாளி ஒருவரின் பின் வரும் புலம்பல் இதை நாம் அறியச் செய்கிறது:

முக்காபடிக் கேப்பைக்காக
முந்திருந்து* (*நீண்ட நேரம்) வாடுறேனே
ஐயா முதலாளி ! நீங்க
அளக்குறது பொட்ட(டை) நாழி !

(தோழர்: எஸ்.எஸ். போத்தையா சேகரித்தது)

இப்படிப் புலம்புவது ஒருபுறம் என்றால் மற்றொருபக்கம் விவசாய சங்கம் அமைத்துப் போராட்டம் நடத்தி, ஒன்றுபட்ட அன்றையத் தஞ்சை மாவட்ட வேளாண் குடிகள் அரசின் முத்திரை மரக்காலால் அளப்பது என்பதை ஒப்பந்தம் ஒன்றின் வழி உறுதிப்படுத்திக் கொண்டார்கள். இங்கு முத்திரை மரக்கால் என்பது அரசால் ஒரே சீரான கொள்ளளவு கொண்டதாக நாடு முழுவதும் பயன்படுத்த உருவாக்கப்பட்ட மரக்காலாகும். ஆனால் நிலவுடைமையாளர்கள் இதைப் பொருட்படுத்தாது மேற்கூறிய தொம்பரை மரக்காலையும்,கள்ளமரக்காலையும் பயன்படுத்தி உழுகுடிகளைச் சுரண்டிவந்தனர். எட்டையபுரம் ஜமின்தார் ஒருவர் தம் ஆளுகையில் இருந்த பகுதியில் ஆங்கிலேயர் அறிமுகம் செய்த மரக்காலை அறிமுகப்படுத்தியுள்ளார்.இது மக்களுக்கு மகிழ்ச்சியளித்துள்ளது. இவர் இறந்தபோது வருந்திய அப்பகுதி மக்கள் இச்செயலை நினைவுகூர்ந்து

பூவரசங் கொப்பு வெட்டி/புதுமரக்கால் உண்டு பண்ணி/ நித்தம் நித்தம் படியளக்கும் /வள்ளத்தையா மகராசா' என்று பாடியுள்ளனர்((எஸ்.எஸ். போத்தையா). இங்கு புதுமரக்கால் என்பது காலனிய அரசு அறிமுகம் செய்த மரக்காலாகும்.



## முத்திரை மரக்கால் நடைமுறைக்கு வருதல்:

1944இல்தஞ்சைமாவட்டம்களப்பால்என்ற ஊரில் பெருநிலக்கிழார்கள்,அரசுத்தரப்பினர் கம்யூனிஸ்ட் கட்சி சார்பு கொண்ட விவசாயசங்கத்தினர் நடத்திய முத்தரப்புப் பேச்சுவார்த்தையில், அரசின் தரச்சான்று பெற்ற அளவுகருவியே பயன்படுத்தப்படவேண்டும் என்பது குறித்துப் பேசப்பட்டாலும் அதை விவசாயசங்கம் தற்காலிகமாக வலியுறுத்தவில்லை. இதற்குக் காரணம், சாணிப்பால் புகட்டுதல், சவுக்கால் அடித்தல் என்ற கொடுரமான தண்டனைகளுக்கு விவசாயிகள் ஆட்படுத்தபட்டு வந்தனர்.சட்டத்திற்கு மாறான இத்தண்டனை நிலக்கிழார்களால் விதிக்கப்பட்டு அவர்களாலேயே நிறைவேற்றப் பட்டும் வந்தது.

இது தடை செய்யப்படவேண்டும் என்பதில் விவசாய சங்கம் உறுதியாக இருந்து அதில் வெற்றியும் பெற்றது. அடுத்ததாக கூலி உயர்வும் முன்வைக்கப்பட்டது.

ஒரே நேரத்தில் ஏராளமான தடையாணைகளையும் உரிமைகளையும் பெறமுடியாது என்ற நிலையில் ஓரளவுக்கு மேல் மரக்கால் பிரச்சினயை களப்பால் உடன்படிக்கையில் வலியுறுத்தவில்லை. பின்னர் இதே ஆண்டு(1944) திசம்பரில் மன்னார் குடியில் நடந்த முத்தரப்புக் கூட்டத்தில் முத்திரை மரக்கால் பயன்படுத்தவேண்டும் என்பதை வலியறுத்தி அதை எழுத்துவடிவிலான உடன்பாட்டில் இடம்பெறச் செய்வதில் விவசாயச் சங்கம் வெற்றிபெற்றது.

குத்தகை நெல்லைப் பகிர்ந்து கொள்வதிலும் கூலியாக நெல் வழங்கும் போதும் அரசின ரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட. மரக்காலையும் பிற முகத்தலளவைக் கருவிகளையும் மட்டுமே பயன்படுத்தவேண்டும் என்ற உழைக்கும் மக்களின் நீண்டநாள் விருப்பத்தை மன்னார்குடிஒப்பந்தம் நடைமுறைப்படுத்தியது. சுரண்டலின் அடையாளமாக விளங்கிய தொம்பரை மரக்காலும் முக்காமரக்காலும் ஒன்றுபோல் ஒழிந்தபோயின.அத்துடன் சாகுபடி வேலை யிலும்,அறுவடையிலும் கூலி உயர்வையும் விவசாய சங்கம் பெற்றுத் தந்தது.விவசாய சங்கம் உருவாகாது தீவுபோல் இருந்த ஒன்றிரண்டு பகுதிகளில் இம்மரக்கால்கள் சிலவருடங்கள் தொடர்ந்தாலும் இறுதியில் மறைந்தொழிந்தன.

## கள்ளமரக்கால் உடைப்புப் போராட்டம்:

தொம்பரை மரக்காலைப் போன்று நெல்லை மாவட்டத்தில் களக்காடுப் பகுதியில் மிகுதியான நன்செய்நிலங்களை சமயமடங்கள் கொண்டிருந்தன. நெல் விளையும் இவ் வளமான நிலங்களைக் குத்தகைக்கு விடுவது வழக்கம்.அறுவடையின் போது மடத்தின் பங்கை களத்தில் நெல்லாகவே பெறும் மடத்தின் அதிகாரிகள் மேலே குறிப்பிட்ட தொம்பரை மரக்கால் போன்று அதிகக்கொள்ளளவு உள்ள மரக்காலால் அளக்கும்படிச் செய்து பெற்றுக் கொள்வார்கள்.இதைக் கள்ளமரக்கால் என்று பெயரிட்டு தங்களுக்குள் அழைத்தாலும் குத்தகை உரிமை பறிபோய்விடும் என்ற அச்சத்தால் குத்தகை விவசாயிகள் இதற்கு உடன்படுவார்கள்.முத்திரை மரக்காலை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற விவசாயசங்கத்தின் கோரிக்கையை மடங்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தன.அப்பகுதியில் கம்யூனிஸ்ட் இயக்கத்தை உருவாக்குவதில் ஈடுபட்டிருந்த தோழர்கள், பாலதண்டாயுதம், இரா.நல்லகண்ணு ஆகியோரின் வழிகாட்டுதலால் பால்ராஜ் என்ற தலித் தோழர், மடத்து அதிகாரிகள்,உழுகுடிகள் கண்முன்னே கள்ளமரக்காலை உடைத்தெறிந்தார். இது வன்முறைச் செயலாகப் பார்க்கப்படாது மடத்தின் மீதான உழுகுடிகளின் அச்சத்தைப் போக்கி, உழுகுடிகள் விழித்துக் கொண்டார்கள் என்ற செய்தியை அறிவித்தது. கள்ளமரக்கால் உடைப்புப் போராட்டம் என்ற பெயரில் இந்நிகழ்வு அழைக்கப்பட்டு அப்பகுதி மக்களின் பேசு பொருளானது.

இவ்வாறு மரக்கால் என்ற முன்னாள் முகத்தலளவைக் கருவி சுரண்டல் சுரண்டலெதிர்ப்பு ,என்ற வரலாற்று நிகழ்வுகளையும் சில நம்பிக்கைகளையும் தன்னுள் கொண்டுள்ளது.

இது போல் பெரும்பாலான பொருள்கள் அடித்தளமக்களின் கடந்தகால அவலங்களையும் அவர்களது எதிர்குரல்களையும் சுயமரியாதை உணர்வின் வெளிப்பாடுகளையும்

போராட்டங்களையும் நம்பிக்கை களையும் தம்முள் கொண்டுள்ளன. இவற்றை வெளிக்கொணரும் போதுதான் உண்மையான மக்கள் வரலாறு உருவாகும்.

# பர்வீன் பானுவைக் கொன்ற குற்றவாளிக்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டும்

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஒன்றியம், காரணியானேந்தல் கிராமத்தில் பர்வீன் பானு என்ற 42 வயது பெண் சிறுவயதிலேயே கணவனை இழந்து, இரண்டு பெண் குழந்தைகளை, இரண்டு பால் மாடுகள் வைத்துப் பால் கறந்து விற்று, கடின உழைப்பால் அவர்களை நன்கு படிக்க வைத்து வந்த நிலையில், 13.7.2025 அன்று மாலை 6 மணிக்கு மாடுகளைத் தேடிப் போன நிலையில், கயவனால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மாதர் சம்மேளனம் புகார் மனு




பர்வீன் பானுவைக் கொலைசெய்த குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை வழங்கவும், அவருடைய இரண்டு பெண்களுக்கு நிரந்தரமாக அரசுப் பணி வழங்கவும், நிவாரணம் வழங்கவும், பெருங்காட்டில் உள்ள இரண்டு டாஸ்மாக் கடைகளை மூடவும், கஞ்சா போதைப் பொருட்களைத் தடைசெய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, மாநில மகளிர் ஆணையம் தலைவர் குமாரி அவர்களிடம், இந்திய மாதர் தேசிய சம்மேளனம் தமிழ்நாடு மாநிலக் குழு சார்பில் மனு அளிக்கப்பட்டது.

கும்மிடிப்பூண்டியில்

# சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டம்




திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி ஒன்றியம், ஆரம்பாக்கம் பகுதியில் எட்டு வயதுச் சிறுமியைப் பாலியல் வன்கொடுமை செய்த கொடூரனைக் கைது செய்யக்கோரி, இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பாக, கண்டன ஆர்ப்பாட்டம் ஆரம்பாக்கம் காவல் நிலையம் முன்பாக நடைபெற்றது.

மாதர் சங்க மாவட்டச் செயலாளர் நாகஜோதி தலைமையில் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் மு.கண்ணகி, மாநிலக் குழு உறுப்பினர் மாணிக்கவள்ளி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் கே.கஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் ஜெ.அருள், மாவட்டக் குழு உறுப்பினர் உமாநாத், ஒன்றிய துணைச் செயலாளர் என்.செங்கல்வராயன், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் சேகர், ஜெகநாதன், சுதாகர், செல்வம் என 200க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.



**பசுத்தோல் போர்த்திய புலி வேடத்துடன் வலம் வரும் பா.ஜ.கவைத் தோலுரித்துக் காட்டுவோம்!**

**பெருந்திரளாய் அணி திரண்டு வாரீர் சேலம் நோக்கி!**

## ஆக. 9 இருசக்கர வாகனப் பிரச்சாரம் சிபிஐ கீழையூர் ஒன்றியக் குழு முடிவு



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கீழையூர் ஒன்றியக் குழு கூட்டம் ஜூலை 25 கட்சி அலுவலகத்தில் ஒன்றியக் குழு உறுப்பினர் டி.பாலாஜி தலைமையில் நடைபெற்றது. மாநில மாநாடு மற்றும் எதிர்கால அரசியல் பணிகளை விளக்கி, கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் டி.செல்வம் பேசினார். இதில் ஒன்றியச் செயலாளர் வீ.எஸ்.மாசேத்துங், மாவட்டக் குழு உறுப்பினர்கள் எஸ்.காந்தி, வீ.சுப்பிரமணியன், ஒன்றிய துணைச் செயலாளர் ஜி.சங்கர், ஒன்றியப் பொருளாளர் எம்.பர்ணபாஸ், ஒன்றிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி.கண்ணையன், டி.சந்திரகாசன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில மாநாடு சேலத்தில் நடைபெறுவதை விளக்கி வெள்ளையனே வெளியேறு போராட்டம் நடந்த ஆகஸ்ட் 9 ஆம் தேதி, கீழையூர் ஒன்றியம் முழுவதும் இருசக்கர வாகனப் பிரச்சார இயக்கம் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

## பணியாளர்களுக்குச் சீருடை மற்றும் அடையாள அட்டை வழங்கிட வேண்டும்



### தமிழ்நாடு டிபிசி தொழிலாளர் சங்கம் வலியுறுத்தல்

தமிழ்நாடு டிபிசி தொழிலாளர் சங்கம், தென்காசி மாவட்ட அமைப்புக் குழு கூட்டம் ஜி.முருகையா தலைமையில் சங்கரன் கோவிலில் நடைபெற்றது.

சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், மருத்துவத்துறைப் பணியாளர்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி ஆகியோர் சங்கத்தின் முக்கியத்துவம் மற்றும் கோரிக்கைகளை விளக்கிச் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்பட வேண்டும், அடிப்படை ஊதியத்துடன் அகவிலைப் படியும் சேர்த்து வழங்க வேண்டும். பணியாளர்களுக்குச் சீருடை மற்றும் அடையாள அட்டை வழங்கிட வேண்டும். பணிப் பாதுகாப்பு வழங்கிட வேண்டும் ஊதியத்துடன் கூடிய வார விடுமுறை வழங்கப்பட வேண்டும் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தென்காசி மாவட்டச் செயலாளர் த.இசக்கித்துரை ஏ.ஐ.டி.யூ.சி மாவட்டப் பொதுச் செயலாளர் தி.சுப்பையா, தூய்மைப் பணியாளர்கள் சங்க மாவட்டச் செயலாளர் ஆர்.சமுத்திரக்கனி, திருவேங்கடம் ஒன்றியச் செயலாளர் ஜே.அந்தோணிராஜ், சங்கரன் கோவில் ஒன்றியச் செயலாளர் பழனிமுருகன் டி.பி.சி தொழிலாளர் சங்க மாநிலப் பொதுச்செயலாளர் சதீஷ், பொருளாளர் பூமிநாதன், துணைப் பொதுச் செயலாளர் மகாலிங்கம், துணைத் தலைவர் சுதா உட்பட மாநிலப் பொறுப்பாளர்கள் சிறப்புரையாற்றினர். இதில் ஏராளமான கொசு ஒழிப்புப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## ஊரக வளர்ச்சித் துறை தொழிலாளர்கள் காத்திருப்புப் போராட்டம்



தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில், மாநிலம் தழுவிய சோத்து சட்டியுடன் காத்திருப்பு போராட்டம் ராமநாதபுரத்தில் நடைபெற்றது. இதற்க்கு மாநிலத் துணைத் தலைவர் ஆறுமுகம் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் நவநீதன், சாந்தி, தினகரன், தேவி, எம்.கே.ராஜன், சண்முகராஜா உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

## மக்கள் கோரிக்கை கையெழுத்து இயக்கம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மணிகண்டம் ஒன்றியக் குழு சார்பில், மக்கள் கோரிக்கை சம்பந்தமாக கையெழுத்து இயக்கம் 21.7.2025 அன்று சோமரசம்பேட்டை பெரியார் சிலை அருகில், ஒன்றியச் செயலாளர் எம்.ஆர். முருகன் தலைமையில் நடைபெற்றது. மத்தியக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் முதல் கையெழுத்திட்டு துவக்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினார். மணிகண்டம் ஒன்றிய துணைச் செயலாளர்கள் எம்.மருதாம்பாள், கே.மேகராஜ், மாவட்டக் குழு உறுப்பினர் எம்.ரஜியாபேகம் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பின்னர் 5 குழுக்களாகப் பிரிந்து மாரியம்மன் கோவில் தோப்பு, புதுத்தெரு, நூருகிராமம், கே.கே.நகர் உள்ளிட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று மக்களிடம் கையெழுத்து பெற்றனர்.

## நீட் போராட்ட வழக்கில் இருந்து தோழர்கள் விடுதலை



அரியலூர் மாணவி அனிதா மரணத்திற்கு நீதி கேட்டும், நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்குக் கோரியும், சூலூர் தெற்கு வட்டாரக் குழுக்களின் சார்பில், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், மாணவர் பெருமன்றம், இந்திய மாதர் தேசிய சம்மேளனம் ஆகிய அமைப்புகளின் சார்பில், 03.09.2017 அன்று இருகூரில் ரயில் மறியல் போராட்டம் நடைபெற்றது. இதில் 26 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதில் பங்கேற்ற ஆர்.கணேசன், மௌ.குணசேகர், எம்.ஜீவராஜ், சு.பிரசாத் மற்றும் ர.மாலதி ஆகியோர் மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டது. இந்த வழக்கு கோவை ஜெ.எம்.1 நீதிமன்றத்தில் கடந்த எட்டு ஆண்டுகளாக நடைபெற்று வந்தது. இதில் கடந்த 18.07.2025 தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி குற்றம்சாட்டப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். இந்த வழக்கிற்காக மூத்த வழக்கறிஞர் எஸ்.இராதாகிருஷ்ணன் ஆஜராகி வாதாடினார். இளம் வழக்கறிஞர்கள் பா.தீபிகா, ர.ரேணுகா, எஸ்.முருகேசன், ம.வெற்றி, ப்ரீடா, பிரியதர்ஷினி ஆகியோர் சட்ட உதவிகள் புரிந்தனர்.

## தமிழக அரசின் சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி



மயிலாடுதுறை நகராட்சி என்.கிட்டப்பா மேல்நிலைப் பள்ளியில், மாவட்டச் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில், தமிழக அரசின் சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது. இப்புகைப்படக் கண்காட்சியில், தமிழ்நாடு முதலமைச்சரால் துவக்கி வைத்த புதிய திட்டங்கள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியது குறித்த புகைப்படங்கள் உள்ளிட்ட 100 க்கும் மேற்பட்ட புகைப்படங்கள் இடம்பெற்றிருந்தன. இப்புகைப்படக் கண்காட்சியைப் பள்ளி, மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## பழுதடைந்த மின்கம்பங்களை மாற்ற வலியுறுத்தி கோவில்பட்டியில் ஆர்ப்பாட்டம்



கோவில்பட்டி 20வது வார்டுக்கு உட்பட்ட தெற்கு பஜாரில் உள்ள மோசமான மின்கம்பங்களை உடனடியாக மாற்ற வலியுறுத்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அந்த மின்கம்பங்களுக்கு முன்பு நின்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கிளைச் செயலாளர் செல்லையா தலைமை வகித்தார். நகரச் செயலாளர் செந்தில் ஆறுமுகம், நகர உதவிச் செயலாளர்கள் விஜயலட்சுமி, அலாவுதீன், இளைஞர் பெருமன்ற நகரக் குழு உறுப்பினர் விநாயகா மணிகண்டன் மற்றும் பலர் கலந்து கொண்டு மோசமான நிலையில் காணப்படும் மின்கம்பங்களை மாற்ற வலியுறுத்தி கோஷமிட்டனர்.

## வீட்டுமனை பட்டாக்களைப் பதிவேற்றம் செய்யாததைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



கோவில்பட்டி அருகே மந்திதோப்பு வருவாய் கிராமத்துக்கு உட்பட்ட இந்திரா காலனியில் வீடு கட்டி குடியிருந்து வரும் மக்களுக்கு, கடந்த 5 மாதங்களுக்கு முன்பு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. இந்தப் பட்டாக்களை கிராமக் கணக்கில் பதிவேற்றம் செய்யாமல் காலதாமதப்படுத்துவதைக் கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தாலுகா செயலாளர் பாபு தலைமை வகித்தார். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் சேதுராமலிங்கம், தாலுகா உதவிச் செயலாளர் ராமகிருஷ்ணன். நகரச் செயலாளர் செந்தில் ஆறுமுகம், மாவட்டக் குழு உறுப்பினர் ரெங்கநாதன், நகர உதவிச் செயலாளர்கள் விஜயலட்சுமி, அலாவுதீன் மற்றும் இந்திரா காலனி பகுதி மக்கள் கலந்து கொண்டு கோரிக்கையில் வலியுறுத்திக் கோஷமிட்டனர். தொடர்ந்து துணை வட்டாட்சியர் அருணாவிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினர்.

## சிபிஎம் பொதுச் செயலாளருக்கு வரவேற்பு



தஞ்சைக்கு வருகை தந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி அவர்களை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் கோ.சக்திவேல், ஏஐடியூசி மாநிலச் செயலாளர் சி.சந்திரகுமார், மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.ராமச்சந்திரன், பொருளாளர் ஜி.பாஸ்கர், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் வெ.சேவையா, இளைஞர் பெருமன்ற மாநிலப் பொருளாளர் க.காரல்மார்க்ஸ், மாநகரச் செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன், ஒன்றியச் செயலாளர் ஒரத்தநாடு வாசு இளையராஜா, பட்டுக்கோட்டை பூபேஷ் குப்தா ஆகியோர் சந்தித்து, தொல்காப்பியர் முதல் குலோத்துங்கன் வரை என்ற ஆங்கிலப் புத்தகத்தை வழங்கி, கைத்தறி ஆடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

## மக்கள் கோரிக்கை கையெழுத்தியக்கம்

திருச்சி ஜங்ஷன், மேரிஸ் மேம்பாலப் பணிகள் துரிதமாக முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரக் கோரி, திருச்சி தஞ்சை தேசிய நெடுஞ்சாலையில், பால்பண்ணை முதல் துவாக்குடி வரை சர்வீஸ் சாலை அமைக்கும் திட்டத்தைத் துவக்கிடக் கோரி, அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவர்கள், செவி லியர்கள், பணியாளர்களை பற்றாக்குறையைப் போக்கிடக் கோரி, திருச்சி மெட்ரோ ரயில் திட்டம் மற்றும் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணிகளைத் துவங்கக் கோரி கட்சியின் சார்பில், திருச்சி மாநகர் மாவட்டம் மேற்குத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், மக்கள் கோரிக்கை கையெழுத்தியக்கம் ஜூலை 21ல் மேற்குப் பகுதிச் செயலாளர் இரா. முத்துசாமி தலைமையில் துவங்கியது.

ஜூலை 22 அன்று, 8வது வார்டில் பொருளாளர் முருகன் தலைமையிலும், ஜூலை23 அன்று, நிர்வாகக் குழு உறுப்பினர் ரவீந்திரன் தலைமையிலும், ஜூலை 24 அன்று, 25வது வார்டில் நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.சுமதி தலைமையிலும், 10வது வார்டில் நிர்வாகக் குழு உறுப்பினர் க.ஆயிஷா தலைமையிலும் மக்களிடம் கையெழுத்து பெறப்பட்டது. ஜூலை 31ல் பெரும்திரள் பேரணி, ஆர்ப்பாட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

## சேலத்தில் நடைபெறும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டுப் பேரணியில் அணிதிரள்வோம்

### தஞ்சாவூர் தெற்கு மாவட்டக் குழு முடிவு




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சாவூர் தெற்கு மாவட்டக் குழு கூட்டம் தஞ்சாவூர் கீழராஜவீதியில் உள்ள கட்சி அலுவலகக் கூட்டரங்கில் மாவட்டக் குழு உறுப்பினர் எம்.அண்ணாதுரை தலைமையில் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினரும், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான க.மாரிமுத்து, மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் முத்து.உத்திராபதி ஆகியோர் தமிழ்நாட்டின் அரசியல் சூழ்நிலைகள் குறித்தும், கட்சியின் மாநில முடிவுகள் குறித்தும் சிறப்புரையாற்றினார்கள்.

மாவட்டச் செயலாளர் கோ.சக்திவேல் கட்சியின் 26வது மாவட்ட மாநாடு குறித்தும், நடைபெற்ற பணிகள் குறித்தும் வேலை அறிக்கையை முன்வைத்தார்.

கால நிர்ணயத்தை நீட்டித்துத் தர வேண்டும், தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாரந்தோறும் நடைபெறும் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்திற்கு முறையாகப் பதிவு செய்யப்பட்ட விவசாயிகள் சங்கத்திற்கு, அவர்கள் சங்க அலுவலகத்தின் முகவரிக்கு உரிய அழைப்பு விடுத்துக் கூட்டத்தில் கலந்துகொள்ள ஏற்பாடு செய்ய என தஞ்சை மாவட்ட ஆட்சியரை இந்தக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு வருகிற ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி சேலத்தில் துவங்குகிறது.

சேலத்தில் நடைபெறும் மாநில மாநாடு மற்றும் பேரணியில் தஞ்சை தெற்கு மாவட்டத்தில் இருந்து ஆயிரம் பேர் பங்கேற்பது என்ற முடிவு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. மாவட்டக் குழு கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் இரா.இராமச்சந்திரன், பொருளாளர் கோ.பாஸ்கர் மற்றும் மாவட்டக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கம் அமைப்புக் கூட்டம்



தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்க, மண்ணச்சநல்லூர் கிளை அமைப்புக் கூட்டம் 25.07.2025 அன்று எம்.ஞானசேகர் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் திருச்சி மாவட்ட தலைவர் எம்.ஆர்.முருகன் கலந்துகொண்டு வழிநடத்தினார். கூட்டத்தில் தலைவராக எம்.ஞானசேகர், செயலாளராக ஆர்.செல்வராஜ், பொருளாளராக எம்.தர்மராஜ், துணைத் தலைவராக எம்.சுந்தரம், துணைச் செயலாளராக ஆர்.ராமசாமி, கே.தண்டபாணி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## ஆட்டு வியாபாரி மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

கழுகுமலை அருகே வைரவசாமி என்பவரிடம், காலாங்கரைப்பட்டியைச் சேர்ந்த ஆட்டு வியாபாரி ஆடுகள் வாங்கி உள்ளார். ஆனால், அதற்கான பணத்தை கடந்த இரண்டரை ஆண்டுகளாகக் கொடுக்காமல் காலந்தாழ்த்தி உள்ளார். மேலும் ஆட்டு வியாபாரி மீது கழுகுமலை காவல் நிலையத்தில் புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனைக் கண்டித்தும், ஆட்டு வியாபாரி மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் கழுகுமலையில் காந்தி மைதானம் அருகே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு கோவில்பட்டி தாலுகா செயலாளர் பாபு தலைமை வகித்தார். தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் கரும்பன், கயத்தாறு ஒன்றியச் செயலாளர் பொன்னுச்சாமி, கோவில்பட்டி நகரச் செயலாளர் செந்தில் ஆறுமுகம் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர். ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் சேதுராமலிங்கம், ஒன்றிய துணைச் செயலாளர் ராமலிங்கம், ஒன்றியச் பொருளாளர் ரஜினி முருகன், தாலுகா குழு உறுப்பினர் அந்தோணியம்மாள், திருவேங்கடம் ஒன்றியச் செயலாளர் அந்தோணி ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.

## மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்களுக்கு நினைவஞ்சலி



திருநெல்வேலி மாவட்டம் மாஞ்சோலையில், கூலி உயர்வு கேட்ட தோட்டத் தொழிலாளர்கள், குழந்தைகள், பெண்கள் காவல் துறை தாக்குதலால் தாமிரபரணியில் மூழ்கி உயிர் இழந்தனர். அவர்களின் நினைவு நாளான 23.07.2025 அன்று, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்டச் செயலாளர் ஆர்.சடையப்பன் தலைமையில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் ஏஐடியுசி மாநிலத் தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன், களக்காடு ஒன்றியச் செயலாளர் எம்.லெனின் முருகானந்தம், நெல்லை மண்டலச் செயலாளர் ஏ.வெடிகண்ட பெருமாள், மாதர் சங்கச் செயலாளர் பி.சபியாள், இளைஞர் பெருமன்ற தலைவர் க.முத்துகிருஷ்ணன், விவசாயத் தொழிலாளர் சங்கச் செயலாளர் எஸ்.ஏ.பி.பாலன், மாணவர் பெருமன்றச் செயலாளர் எம்.நவராஜ் மோசஸ், மாவட்டக் குழு உறுப்பினர்கள் ஏ.முத்துகிருஷ்ணன், பி.கிருஷ்ணன், எஸ்.கணேசன், வி.தங்கையா ஆகியோர் கலந்துகொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

## சுகாதாரத் தொழிலாளர்கள் அரியலூரில் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு

அரியலூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் ஏஐடியுசி சுகாதாரத் தொழிலாளர் சங்கக் கூட்டம் ம.கோபி தலைமையில் நடைபெற்றது. சங்கத் துணைத் தலைவர் செ.மாரியப்பன், கே.நாகூரான் முன்னிலை வகித்தனர். சங்கச் செயலாளர் ரெ.நல்லுசாமி, ஏஐடியுசி உள்ளாட்சித் துறை பணியாளர் சம்மேளன மாநிலச் செயலாளர் டி.தண்டபாணி ஆகியோர் தொழிலாளர் பிரச்சினைகள் குறித்துப் பேசினர்.

அரியலூர் நகராட்சி சுகாதாரத் தொழிலாளர்களுக்குக் குறைவான ஊதியமே கொடுக்கப்படுகிறது. ஆனால் அதிகமான வேலைப்பளுவைத் திணிக்கிறார்கள். ஒவ்வொரு மாதமும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு நான்கு நாள் சம்பளத்தைப் பிடிக்கிறார்கள். மேலும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஜூலை 30 ல் ஆர்ப்பாட்டம் செய்வது, ஆகஸ்ட் 4 அன்று அரியலூர் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

## அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும்

### டெல்லியில் ஏஐகேஎஸ் ஆர்ப்பாட்டம்




இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை ரத்து செய்ய வலியுறுத்தி, புதுதில்லி கோட்லா மார்க் தபால் அலுவலகம் முன்பு, அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஒப்பந்தத்தினால் நமது நாட்டின் விவசாய உற்பத்திப் பொருட்களான பால், பருப்பு, இறைச்சி, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி பாதிக்கப்படும், இறக்குமதி வரிகள் குறைக்கப்படும். ஆகவே இந்திய விவசாயம் பாதிக்கப்படும் ஆபத்து உள்ளது. எனவே விவசாயிகள் விரோத ஒப்பந்தத்தை ரத்து செய்ய வலியுறுத்தி, அகில இந்தியத் தலைவர் ராஜன் கிஷிசாகர், செயலாளர் ராவலவெங்கையா, பி.எஸ்.மாசிலாமணி, கே.டி.சிங், சிரிகுமார் முகர்ஜி, தாராசிங் சித்து, கே.வி.வி.பிரசாத், சித்தார்சிங் உள்ளிட்ட தேசியக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு பேசினர். தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளும் இதில் பங்கேற்றனர்.

## உள்ளாட்சிப் பணியாளர் சம்மேளனம் தருமபுரியில் காத்திருப்புப் போராட்டம்



தருமபுரி மாவட்ட முனிசிபல் பஞ்சாயத்து, பொதுப் பணியாளர்கள் சம்மேளனம் சார்பில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு காத்திருப்புப் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்திற்கு மாவட்ட தலைவர் என்.மனோகரன், பேரூராட்சிப் பணியாளர் சங்க தலைவர் சத்தியவாணி ஆகியோர் தலைமை வகித்தனர். ஊரக வளர்ச்சி துறை மாநிலப் பொருளாளர் ஜி.இராஜேந்திரன், சிபிஐ மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம், ஏஐடியுசி மாநிலத் துணைத் தலைவர் கே.மணி ஆகியோர் கோரிக்கைகள் குறித்து விளக்கிப் பேசினர்.

கொரோனா கலத்தில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு அரசு உத்தரவாதம் அளித்த கொரோன ஊக்கத் தொகையை வழங்க வேண்டும். கிராம ஊராட்சிகளில் காலிப் பணியிடங்களை நிரப்பவேண்டும். கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் சுகாதார ஊக்குநர்கள், தூய்மைப் பணியாளர்கள், தூய்மைக் காவலர்கள், கணினி இயக்குபவர்கள், பள்ளி தூய்மைப் பணியாளர்கள், டேங்க் ஆபரேட்டர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் குறைந்தபட்சக் கூலி சட்டப்படி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினார்கள். இதில் ஏஐடியூசி மாவட்டத் தலைவர் முருகன், மாவட்ட துணைத் தலைவர் சுதர்சனன், மாவட்ட துணைச் செயலாளர் நடராஜன் உள்பட ஏராளமான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். பின்னர் மாவட்ட ஆட்சியர் சதீஸிடம் கோரிக்கை மனுவை அளித்தனர்.

## ‘கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும்’

### இண்டூர் வட்டார மாநாடு வலியுறுத்தல்




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இண்டூர் வட்டார 4வது மாநாடு கட்சி அலுவலகத்தில் மாதையன், குட்டி, பெரியண்ணன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

மாநிலக் குழு உறுப்பினர் எஸ்.சின்னசாமி கொடி ஏற்றினார். வட்டாரத் துணைச் செயலாளர் எம்.மாதையன் வரவேற்றார். வட்டாரத் துணைச் செயலாளர் வி.மணி அஞ்சலித் தீர்மானம் வாசித்தார். வட்டாரச் செயலாளர் பி.மாது வேலை அறிக்கை சமர்ப்பித்தார். மாநிலக் குழு உறுப்பினர் பா.தினேஷ் மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசினார். மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.தேவராசன், தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்க மாநிலச் சிறப்புத் தலைவர் ந.நஞ்சப்பன் முன்னாள் எம்எல்ஏ, கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம், துணைச் செயலாளர் எம்.மாதேஸ்வரன், பொருளாளர் எம்.மாதையன் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

மாநாட்டில் வட்டாரச் செயலாளராக பி.மாது, வட்டாரத் துணைச் செயலாளர்களாக டி.எம்.மாதையன், வி.மணி, பொருளாளராக மாணிக்கம் மற்றும் 31 பேர் கொண்ட வட்டாரக் குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

இண்டூரைத் தலைமையிடமாகக் கொண்டு தனி ஊராட்சி ஒன்றியம் அமைக்க வேண்டும். பால் பொருட்கள், பிஸ்கட் தொழிற்சாலை தொடங்க வேண்டும். சோமனஅள்ளியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இறுதியில் வட்டப் பொருளாளர் மாணிக்கம் நன்றி கூறினார்.

# “எடப்பாடியிடம் முதிர்ச்சியான அரசியல் இல்லை”



## கோவையில் இரா.முத்தரசன் பேட்டி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட 25வது மாநாட்டில் கலந்து கொள்ள பெரியநாயக்கன்பாளையம் வருகை தந்த, கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது.

“அதிமுக 30 ஆண்டுகாலம் தமிழகத்தை ஆட்சி செய்த ஒரு கட்சி, தற்போது சட்டமன்றத்தில் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி எதிர்க்கட்சித் தலைவராக உள்ளார். எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் நல்ல ஆரோக்கியமான அரசியல் விவாதம் நடைபெற வேண்டும் என்றும், எடப்பாடி பழனிசாமி அவர்களிடமிருந்து முதிர்ச்சியான அரசியலை எதிர்பார்க்கிறோம்.

கடந்த ஏழாம் தேதி மேட்டுப்பாளையத்தில் அவர் தனது பிரச்சாரத்தை மேற்கொண்டார். அப்போது அவர் கம்யூனிஸ்ட் கட்சிகள் கரைந்து போய்விட்டது என்று விமர்சித்துள்ளார். ஆனால், 16ஆம் தேதி சிதம்பரத்தில் பேசிய அவர், கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குச் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கிறோம் என்றும் கூறியுள்ளார். அவர் விரித்து வரவேற்பது சிவப்புக் கம்பளம் அல்ல, அது ரத்தக் கம்பளம், அதை நாங்கள் நிராகரிக்கிறோம் என்று நான் கூறியிருந்தேன்.

ஒன்றியத்தில் பிஜேபி ஆட்சியில், அரசியல் சட்டத்தை நிராகரித்து விட்டு, மனுதர்மத்தைக் கொண்டு வர முயற்சி நடக்கிறது. மதச்சார்பற்ற நாடான இந்தியா, மகத்தான கொள்கையைப் பின்பற்றி வருகிறது. விடுதலை பெற்ற சில மாதங்களிலேயே காந்தி கோட்சேவால் சுட்டுக் கொல்லப்பட்டார். சிபிஎஸ்சி பாடத்திட்டத்தில் முகலாய மன்னர்கள் அட்டூழியம் செய்தார்கள் என்று சேர்த்து இருக்கிறார்கள். எட்டாம் வகுப்புப் பாடத்திட்டத்தில் இருந்து பகத்சிங், ராஜகுரு. சுகதேவ் போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்களின் வரலாறு நீக்கப்பட்டுள்ளது. இதையெல்லாம் எடப்பாடி ஆதரிக்கிறாரா?

தொகுதிச் சீர்திருத்தத்தில் தமிழகத்தின் எட்டு மக்களவைத் தொகுதிகளைக் குறைக்கும் சதி நடக்கிறது. சிபிஐ, வருமானவரித்துறை ஆகிய அமைப்புகள் எதிர்க்கட்சிகளைப் பழிவாங்கப் பயன்படுத்தப்படுகிறது. தேசியக் கல்விக் கொள்கை ஒரு ஆபத்தான கொள்கை, தமிழகத்தில் இரு மொழிக் கொள்கையை அகற்றி விட்டு, இந்தி மொழியைத் திணிக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. பேச்சு வழக்கில் இல்லாத சமஸ்கிருத மொழிக்கு ரூ.2,533 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழுக்கு வெறும் ரூ.13 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. ஜெயலலிதா பிஜேபியுடன் கூட்டணி வைத்தார். ஆனால், 13 மாதங்களில் ஆதரவை திரும்பப் பெற்றார். இனிமேல் பிஜேபியுடன் அரசியல் உறவு கிடையாது என்று பிரச்சாரம் செய்தார்” என்று இரா.முத்தரசன் தெரிவித்தார்.

இந்தப் பேட்டியின் போது கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி, மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்எல்ஏ, மாநிலச் செயற்குழு உறுப்பினர் க.சந்தானம், மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, மாநாட்டு வரவேற்புக் குழு தலைவர் எம்.சிவகனேஷ், ஒன்றியச் செயலாளர் ராமமூர்த்தி, ஜெகநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.

# நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசனுக்குக் கொலை மிரட்டல்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கடும் கண்டனம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

மதுரை மக்களவைத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் 28.07.2025 அன்று நாடாளுமன்ற விவாதத்தில் பங்கேற்று, கடந்த ஏப்ரல் மாதம் பகல்ஹாமில் நடந்த பயங்கரவாதிகளின் தாக்குதல் குறித்துப் பேசினார். அவரது உரை நாட்டின் பிரதமர், பாதுகாப்புத்துறை மற்றும் உள்துறை அமைச்சர்களின் பொய் மூட்டைகளை அவிழ்த்து கொட்டி அம்பலப்படுத்தியது. சு.வெங்கடேசன் அவையில் பேச எழுந்த போதே, பாஜகவினர் கூச்சல் எழுப்பி, குழப்பம் விளைவிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

தமிழ்நாட்டின் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி உறுப்பினர்கள் அரணாக ஒன்றுபட்டு நின்றதால் அவர் உரையாற்ற முடிந்தது. அவர், அவையில் முன்வைத்த கூர்மையான விமர்சனங்களால் ஆளுங்கட்சியின் முகத்திரை, நார், நாராகக் கிழித்து, அதன் பொய் முகம் நாட்டுக்குக் காட்டப்பட்டது. இந்த அரசியல் விமர்சனத்துக்குப் பொறுப்பாக பதிலளிக்கத் திராணியற்ற ஆளுங்கட்சியின் வன்முறைக் கும்பலைச் சேர்ந்தவர், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசனைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கொலை மிரட்டல் விடுத்துள்ளார். “எப்படி நீ பிரதமர் மோடியை விமர்சிக்கலாம்? தமிழ்நாட்டில் உயிரோடு நடமாட முடியாது! நானே கொலை செய்வேன்!” என மிரட்டியுள்ளார்.

இதுபோன்ற கோழைத்தனமான மிரட்டலுக்கு கம்யூனிஸ்டுகள் ஒரு போதும் அஞ்சுவதில்லை என்பதுதான் வரலாறு. அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள கருத்துரிமையைப் பறிக்கும் கொலை மிரட்டலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாகக் கண்டிக்கிறது. இந்தக் கொலை மிரட்டல் தொடர்பாக தமிழ்நாடு காவல் துறையில் புகார் செய்யப்பட்டுள்ளது. இந்தப் புகாரின் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து, கொலைமிரட்டல் செய்தவரையும், அவரது பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பதை விசாரித்து, சதிகாரர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, அவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்து விடாமல் தண்டிக்கப்பட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு, தமிழ்நாடு அரசையும், காவல் துறையினையும் கேட்டுக் கொள்கிறது என மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# வேளாண் கடனுக்கு சிபில் ஸ்கோர் நிபந்தனை இல்லை என்ற அறிவிப்புக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வரவேற்பு

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலப் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்ட அறிக்கை வருமாறு :

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் மாநிலப் பதிவாளர் அனுப்பி உள்ள சுற்றறிக்கையில், தான் இதற்குமுன் அறிவித்திருந்த சுற்றறிக்கையில் உள்ளபடி வேளாண் கடன்கள் வழங்கப்படுவதில் சிபில் ஸ்கோர் நிபந்தனை இனி இல்லை என அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பை வரவேற்கிறோம்.

நடைமுறைக்குச் சாத்தியமில்லாமல், விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் முன், சிபில் ஸ்கோர் மற்றும் என்.ஓ.சி தகுதி வேண்டுமென்று அறிவித்த உத்தரவைத் திரும்பப் பெற்றுள்ளார்.

தலைமைப் பதிவாளர் இந்தப் புதிய நிபந்தனையைக் கைவிட வேண்டும் என வலியுறுத்தி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் உள்ளிட்ட பல சங்கங்கள் தமிழ்நாடு முழுவதும் போராட்டங்களை நடத்தினோம். இந்நிலையில் ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு மட்டும் சிபில் ஸ்கோர் பார்த்தால் போதும் என்ற திருத்த அறிவிப்பைத் தலைமைப் பதிவாளர் கொடுத்தார். இந்த அறிவிப்பும் விவசாயிகளுக்குக் கடன்கள் கொடுப்பதைத் தடுத்திடும் மறைமுகத் தடுப்பானை என எதிர்த்தோம். அதுவும் இந்த அறிவிப்பு வந்த காலம், கடன் பெற்று பயிரிடும் பருவம். கூட்டுறவுக் கடன்கள் பெறுகிற நேரத்தில் வந்ததால் விவசாயிகளின் கடன் மனுக்கள் கூட்டுறவுச் சங்கங்களில் ஆங்காங்கே முடக்கப்பட்டு, கடன்கள் கொடுப்படாத நிலை தொடர்ந்ததால், குளித்தலை போன்ற பல வட்டாரங்களில் விவசாயிகளே தன்னிச்சையாகப் போராட்டங்களை நடத்தினர். சென்னையில் பல சங்கங்கள் இணைந்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினோம்.

இந்நிலையில் கூட்டுறவுத் துறை அமைச்சர் மௌனம் காப்பது கூடாது, தமிழக முதல்வர் உடன் தலையிட்டு, தலைமைப் பதிவாளரின் விவசாயிகளுக்கு எதிரான உத்தரவை ரத்து செய்திட வேண்டுமென வலியுறுத்தி வந்த நிலையில், இந்தப் புதிய நிபந்தனைகள் நீக்கப்பட்டு, பழைய நிலையிலேயே கடன் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதற்குப் பாராட்டைத் தெரிவிக்கின்றோம்.

வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமல்ல, அரசு மற்றும் வணிக வங்கிகளிலும் பயிர்க் கடன் மற்றும் வேளாண் இயந்திரக் கடன்களுக்கு சிபில் ஸ்கோர் நிபந்தனையை நீக்கிட வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்திட தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம் என்று மாநிலப் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# கோவையில் போலி மருத்துவக் கல்லூரி

## அரசு நடவடிக்கை எடுக்க மாணவர் பெருமன்றம் வலியுறுத்தல்

அனைத்திந்திய மாணவர் பெருமன்ற மாநிலத் தலைவர் க.இப்ராகிம், மாநிலச் செயலாளர் பா.தினேஷ் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது. கோவை மாவட்டம், கிணத்துக்கடவு அருகே உள்ள மஹாராஜாஸ் மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனத்தில், சுமார் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

இங்கு பிஎஸ்சி, டிப்ளமா நர்சிங், பிஏஎம்எஸ், பிஎன்ஒய்எஸ் உள்ளிட்ட 8 பாடப்பிரிவுகள் உள்ளன. இக்கல்லூரியில் கடந்த கல்வியாண்டில், எந்தப் பாடப்பிரிவிற்கும் இரண்டாம் பருவத் தேர்வுகள் நடைபெறவில்லை. முதல் பருவத் தேர்வில், மூன்று பாடங்களுக்குத் தேர்வு எழுதிய மாணவர்களுக்கு 8 பாடங்களுக்கு முடிவுகள் வெளியாகியுள்ளன. மேலும், போதுமான வகுப்பறைகள், தகுதியான ஆசிரியர்கள், ஆய்வக வசதிகள் இல்லை. மேலும், பிஏஎம்எஸ் பாடப் பிரிவிற்கு நீட் கட்டாயம் என்ற விதியை மீறி, நீட் தேர்வு எழுதாதவர்களை பிஏஎம்எஸ் பாடப் பிரிவில் சேர்த்துள்ளதாக மாணவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.




இக்கல்லூரி ராஜஸ்தானில் உள்ள சன்ரைஸ் யூனியர்சிட்டி இன் கீழ் செயல்படுவதாக நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கின்றனர்.

ஆனால் பல்கலைக்கழக மானியக்குழுவில் இருந்து அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில், இப்பல்கலைக்கழகமானது ராஜஸ்தான் மாநிலத்திற்கு வெளியில் எங்கும் கல்வி நிறுவனத்தைத் தொடங்கக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளது. மேலும், இக்கல்லூரி தமிழ்நாடு அரசின் அனுமதியையோ, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் அனுமதியையோ பெறவில்லை என மாணவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். மேற்கண்டவை உள்ளிட்டு ஏராளமான பிரச்சினைகளை மாணவர்கள் சந்தித்து வருகின்றனர். இதனால், உண்மையிலேயே இது ஒரு கல்லூரிதானா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதனால் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் துணையோடு 60க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் கடந்த 23.07.2025 அன்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவரிடம், மகாராஜா கல்லூரியின் அங்கீகாரம் தொடர்பாகவும், மாணவர்களின் கல்வியைப் பாதுகாக்கக் கோரியும் மனு அளித்தனர்.

மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் 23.07.2025 அன்று மாலை கிணத்துக்கடவு தாசில்தார், வருவாய் ஆய்வாளர், கிணத்துக்கடவு காவல் ஆய்வாளர் உள்ளிட்டோரும், 24.07.2025 அன்று காலை கோவை அரசு மருத்துவமனை முதல்வர் அவர்களும் கல்லூரியில் நேரடியாக விசாரணை மேற்கொண்டனர். இப்பிரச்சினைகளை மூடி மறைக்கக் கல்லூரி நிர்வாகம் பல்வேறு வழிகளில் செயல்பட்டு வருகிறது. மாணவர்களை ஏமாற்றி கல்லூரியில் சேர்த்து, மோசடியாகப் பணம் பறிப்பதை மட்டுமே இந்நிறுவனம் நோக்கமாக கொண்டுள்ளதாகக் கருத வேண்டியுள்ளது.

எனவே, இக்கல்லூரியின் நிலை குறித்த உண்மை நிலையைக் காலதாமதமின்றி ஆய்வு செய்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், மாணவர்களின் கல்வியைப் பாதுகாக்கவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசை அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலக் குழு வலியுறுத்துகிறது என்று தங்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.

### ஆட்சியரிடம் முறையீடு

கோவை கிணத்துக்கடவுக்கு அருகில் உள்ள மகாராஜா இன்ஸ்டிட்யூட் ஆப் சயின்ஸ் கல்லூரிக்கு அங்கீகாரம் இல்லை, எங்களை ஏமாற்றிச் சேர்த்து உள்ளார்கள். இதனால் எங்களது எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறி, நூற்றுக்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் கோவை மாவட்ட ஆட்சியரிடம் 24.07.2025 அன்று மனு கொடுத்தனர். இதில் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநில நிர்வாகிகள், சிநேகா, துர்கா, செரீப், மௌ.குணசேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# நூறு மாணிக்கக் கற்களில் எதைத் தேர்ந்தெடுப்பது?

## மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் பேச்சு

**‘காலம் தோறும் கம்யூனிஸ்டுகள்’ நூல் வெளியீட்டு விழாவில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வாழ்த்தி உரை நிகழ்த்தினார்.**



அப்போது, “காலம் தோறும் கம்யூனிஸ்டுகள் நூல் வெளியீட்டு விழாவுக்கு நம்முடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விரிவான, சிறப்பான, உணர்வுப்பூர்வமான வாழ்த்துச் செய்தியைத் தந்திருக்கிறார். அந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருப்பது போல, இந்த வெளியீட்டு விழாவுக்குத் தேதி கேட்க அவரிடம் சென்றோம். அப்போது, “நான் வரவில்லை என்றால் நீங்கள் விட்டுவிடுவீர்களா? அல்லது நான் வராமல்தான் இருப்பேனா?” என்று முதலமைச்சர் கேட்டார்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பத்தோடுதான் அவர் இருந்தார். ஆனால் உடல்நலம் பாதிக்கப்பட்டதால் அவரால் பங்கேற்க இயலவில்லை.

உடல்நலப் பாதிப்பு யாருக்கு ஏற்பட்டாலும், நாம் அவர்களைப் பார்த்தவுடன் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள் என்றுதான் சொல்லுவோம். ஆனால் அவர் திமுக தலைவர், தமிழ்நாட்டின் முதலமைச்சர், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்குத் தலைவர், இத்தனை பொறுப்புகள் இருக்கும் போது, எப்படி உழைக்காமல் இருக்க முடியும்? ஆனால், அவருடைய உழைப்பு கரும்பில் சாறு எடுப்பது போல் இல்லாமல், பூவில் தேனெடுப்பது போல் இருக்க வேண்டும் என்று கவிஞர் வைரமுத்து கூறுகிறார். அதனை உங்கள் அனைவரின் சார்பிலும் வழிமொழிகிறேன்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தியாகிகளைப் போற்றக் கூடியவர். இங்கே மேடைக்கு முன்னால் அமர்ந்திருக்கும் பேராசிரியர் அ.மார்க்ஸ், தலைநகர் சென்னையில் காரல் மார்க்சுக்குச் சிலை அமைக்க வேண்டும் என முதலமைச்சருக்குக் கோரிக்கைக் கடிதம் கொடுத்துவிட்டு, அதன் நகலை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கொடுத்தார். முதலமைச்சரிடம் நீங்கள் வலியுறுத்தினால்தான் சென்னையில் காரல் மார்க்சுக்குச் சிலை அமைக்கப்படும் என்று எங்களிடம் கூறினார். நாங்களும் முதலமைச்சரிடம் பேசினோம்.

சட்டப்பேரவையில் “காரல் மார்க்சுக்கு சென்னையில் சிலை வைக்கப்படும்” என முதலமைச்சர் அறிவித்தார். இதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

2022ஆம் ஆண்டு திருப்பூரில் கட்சியின் மாநில மாநாடு நடைபெற்றது. இதற்கான அழைப்பிதழ் கொடுக்க முதலமைச்சரைச் சென்று சந்தித்தோம். அப்பொழுது சிறாவயலில் ஜீவா ஆசிரமம் நடத்தியது பற்றி எடுத்துக் கூறினோம்.

சிராவயலில் ஜீவா நடத்திய காந்தி ஆசிரமம் பற்றி கேள்விப்பட்டுக் காந்தியடிகளே நேரில் சென்றார். அவருடன் பேசிக் கொண்டிருந்த போது “உங்களுக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது?” என்று காந்தி கேட்டார்.

அதற்கு “தேசம்தான் என்னுடைய சொத்து” என்று ஜீவா பதிலளித்தார்.

“இல்லை இல்லை. நீங்கள்தான் தேசத்தின் சொத்து” என்று காந்தி கூறினார்.

இந்த நிகழ்வை முதலமைச்சரிடம் எடுத்துக்கூறி, ஜீவா, காந்தி சந்திப்பின் நினைவாக, ஆசிரமம் இருந்த சிராவயலில் பிரமாண்டமான மண்டபம் கட்ட வேண்டும் என கோரிக்கை விடுத்தோம். அதற்கான கடிதமும் கொடுத்தோம்.

இதனை நினைவு வைத்திருந்து, திருப்பூர் மாநில மாநாட்டில் காணொளி வாயிலாக முதலமைச்சர் உரையாற்றும் போது, “சிறாவயலில் ஜீவா காந்தி சந்திப்பு நினைவு மண்டபம் கட்டப்படும்” என அறிவித்தார். அந்த நினைவு மண்டபம் கட்டும் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. இதனை காணொளி வாயிலாகத் திறந்து வைக்காமல், நேரில் பங்கேற்குமாறு முதலமைச்சருக்கு அழைப்பு விடுக்க உள்ளேன். அந்த நினைவு மண்டபத் திறப்பு விழாவுக்குப் பல்லாயிரக்கணக்கில் நீங்களும் திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என அழைப்பு விடுக்கிறேன்.

வைரமுத்து வரிகளில் “மார்க்சியமும் மின்சாரமும் இல்லாமல் இனி எந்தத் தேசமும் இயங்காது.” இது தெரியாமல் கம்யூனிஸ்ட் கட்சி காணாமல் போகும் என்கிறார்கள் சிலர்.

‘காலந்தோறும் கம்யூனிஸ்டுகள்’ என்ற இந்த நூல் எங்கே தொடங்கி, எங்கே முடிகிறது?

இரண்டு தொகுதி வந்திருக்கிறது. நூறு பேர்தான் இடம்பெற்றுள்ளனர்.

கடலுக்குக் கரை கிடையாது. கல்விக்கு எல்லை கிடையாது. கம்யூனிஸ்டுகளின் தியாகத்திற்கும் எல்லை, அளவு கிடையாது. இரண்டு தொகுதியிலும் 100 பேரைப் பற்றி மட்டும்தான் வந்துள்ளது. கட்சியில் இருந்து விலகிச் சென்றவர்களாக இருந்தாலும் அவர்களின் தியாகத்தை மறுக்க முடியாது. மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் பெ.சண்முகம் குறிப்பிட்டதைப் போல, எந்தப் பாகுபாடும் இன்றி இந்த நூல் வெளிவந்துள்ளது.

சென்னை மாகாணத்தில் முதல் கிளை அமையக் காரணமாக இருந்தவர் அமீர் ஹைதர்கான். அவருடைய வரலாற்றில் தொடங்கி, தா.பாண்டியனில் முடிவடைகிறது. இந்த இரண்டு தொகுதியில் நூறு பேர் இடம்பெற்றுள்ளனர். இன்னும் நூறு, ஆயிரம் என வந்துகொண்டே இருக்கும். அவ்வளவு கம்யூனிஸ்டுகளின் வரலாறு எழுதப்பட வேண்டி இருக்கிறது.

இந்த இரண்டு தொகுதியில் உள்ள ஒவ்வொருவரைப் பற்றிப் படிக்கும் போதும் இரத்தக் கண்ணீர் வடிக்கிற மாதிரிதான் இருக்கும்.

நூறு மாணிக்கக் கற்களை முன்னால் வைத்து நீ ஏதாவதொரு மாணிக்கக் கல்லைத் தேர்ந்தெடு என்றால், எப்படி ஒரு கல்லை எடுக்க முடியும்? நூறுமே மாணிக்கக் கல்தான். ஒன்றை மட்டும் எப்படித் தனியாக எடுக்க முடியும்? ஆகவே, இது ஒரு பெரும் கட்சியினுடைய நூற்றாண்டு என்கிற முறையில், கம்யூனிஸ்டுகளுடைய அளப்பரிய தியாகத்தை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும், இளைய தலைமுறையினருக்கு தெரியப்படுத்த வேண்டும் என்கிற நோக்கத்தோடு இந்த முயற்சி எடுக்கப்பட்டது. ஜீவபாரதி ஏறத்தாழ ஓராண்டு காலம் இதற்காகச் செலவிட்டு மிகச்சிறப்பாக எழுதியிருக்கிறார்.

அடுத்தடுத்து 3ஆம் தொகுதி, 4ஆம் தொகுதி, 5ஆம் தொகுதி எனத் தொடர்ச்சியாக வெளிவரும், வெளிவரவேண்டும்.

இந்த இரண்டு தொகுதி நூல் முழுவதும் ஆர்ட் பேப்பரில் வந்துள்ளது. நான் அறிந்தவரை கம்யூனிஸ்ட் இயக்க நூல் முழுவதும் ஆர்ட் பேப்பரில் வெளிவருவது இதுதான் முதல் தடவை. இது ஒரு சிறப்பு.

தலைவர்கள் படங்கள் அனைத்தும் வரையப்பட்ட ஓவியமாக இடம்பெற்றுள்ளது. இதற்கான பொறுப்பு திருவண்ணாமலை ஓவியர் அன்புவிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் மிகச்சிறப்பான முறையில் வரைந்துள்ளார். அவருக்கும் இந்த நூலைத் தொகுத்துக் கொடுத்த கவிஞர் ஜீவபாரதிக்கும் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

என்.சி.பி.எச் நிறுவனம் அண்மைக்காலமாக மிகச்சிறப்பான நூல்களை வெளியிட்டு வருகிறது. மாமேதை லெனின் தேர்வு நூல்கள், கவிஞர் தமிழ்ஒளியின் 6 தொகுப்புகள், தமிழ்நாடு அரசுடன் இணைந்து அம்பேத்கர் நூல்கள் என வெளியிட்டுள்ளது. தற்போது ‘காலம் தோறும் கம்யூனிஸ்டுகள்’ மிகச் சிறப்பாக வெளியிடப்பட்டுள்ளது. 1000 புத்தகங்கள் அச்சடித்தார்கள். ஆயிரமும் விற்பனையாகி விட்டது. அடுத்து, எல்லோருக்கும் கிடைக்கும் வகையில் மலிவு விலையில் வெளியிடுங்கள் என்று கவிஞர் வைரமுத்து ஆலோசனை கூறியிருக்கிறார். அதனை என்.சி.பி,.எச் நிறுவனம் பரிசீலிக்க வேண்டும்” என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் உரையாற்றினார்.

**காலம்தோறும் கம்யூனிஸ்டுகள் நூல் வெளியீட்டு விழாவில்.. தவத்திரு குன்றக்குடி அடிகளார், மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், என்சிபிஎச் தலைவர் ஸ்டாலின் குணசேகரன் உரைகள் அடுத்த இதழில்...**


## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செங்கல்பட்டு மாவட்ட மாநாடு




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செங்கல்பட்டு மாவட்ட 25வது மாநாடு, 27.07.2025 ஞாயிறு அன்று சிங்கபெருமாள் கோயிலில் பேரணியுடன் நடைபெற்றது.

மாநாட்டுத் தலைமைக் குழுவாக எல்.மேகநாதன், பி.எஸ்.எல்லப்பன், கே.ஏழுமலை ஆகியோர் செயல்பட்டனர். மாநாட்டுக் கொடியை முன்னாள் மாவட்டச் செயலாளர் எல்.மேகநாதன் ஏற்றினார். தியாகிகள் படத்தை கே.கே.சுப்ரமணி, பி.எஸ்.எல்லப்பன், பாண்டுரங்கன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் திறந்து வைத்தனர்.

மாநாட்டைக் கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் வகிதா நிஜாம் துவக்கி வைத்தார். அரசியல் அமைப்பு நிலை வேலை அறிக்கையை மாவட்டச் செயலாளர் ஏ.ராஜ்குமார் முன்வைத்தார். வரவு செலவு கணக்கு தணிக்கைக் குழு அறிக்கையை மாவட்டப் பொருளாளர் வி.சதிஷ் முன்வைத்தார். மாநாட்டில் 27பேர் கொண்ட மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டு, மாவட்டச் செயலாளராக ஏ.ராஜ்குமார், மாவட்டத் துணைச் செயலாளர்களாக வெ.வீராசாமி, இ.பாலாஜி, பொருளாளராக வி.சதிஷ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாநாட்டை நிறைவு செய்து மாநில நிர்வாக் குழு உறுப்பினர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் நிறைவுரை ஆற்றினார்.




**கார்ப்பரேட்டுகளுக்கு கடன் தள்ளுபடி!**
**உழைக்கும் மக்களுக்கோ ஜிஎஸ்டி இடி!**
**அநீதியைத் தட்டிக்கேட்க அணிதிரள்வோம் சேலத்தில்!**

Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

# காலம் தோறும் கம்யூனிஸ்டுகள்
## தியாக வரலாற்று நூல் வெளியீட்டு விழா

முதல் பக்கத் தொடர்ச்சி



◆ முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தியை மாநிலச் செயலாளர் இரா.முத்தரசனிடம் வழங்குகிறார் அமைச்சர் தங்கம் தென்னரசு.











கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் க.சந்தானம் நன்றியுரை ஆற்றினார். ‘காலம் தோறும் கம்யூனிஸ்டுகள்’ நூலில் இடம்பெற்றுள்ள நூறு கம்யூனிஸ்டுகளின் படங்களை வரைந்த ஓவியர் அன்புவுக்கு சிறப்பு செய்யப்பட்டது.

அமைச்சர் கே.என்.நேரு, திமுக செய்தித்தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் கே.எம்.காதர் மொய்தீன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்கள் டி.கே.ரங்கராஜன், கே.பாலகிருஷ்ணன், மதுக்கூர் ராமலிங்கம், டி.ரவீந்திரன், எஸ்.ஏ.பெருமாள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புதுச்சேரி மாநிலச் செயலாளர் அ.மு.சலீம், தமிழ்நாடு மாநில துணைச் செயலாளர்கள் நா.பெரியசாமி, மு.வீரபாண்டியன், தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள் சி.எச்.வெங்கடாசலம், டி.எம்.மூர்த்தி, ஆம்ஆத்மி கட்சியைச் சேர்ந்த வசீகரன் மற்றும் மல்லை சத்யா, அ.மார்க்ஸ், தியாகு, ஜி.செல்வா உட்பட ஏராளமான தோழர்கள் கலந்துகொண்டனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வெளியீட்டு விழாவில் கலந்துகொண்ட தோழர்களால் காமராஜர் அரங்கம் நிரம்பி வழிந்தது. அரங்கிற்கும் வெளியேயும் ஏராளமானோர் காத்திருந்தனர். வெளியீட்டு விழாவில் உரையாற்றிய அனைத்து உரையாளர்களின் பேச்சுகள் புரட்சிகர உத்வேகத்தையும் உணர்வு எழுச்சியையும் ஊட்டியது. இறுதிவரை தோழர்கள் ஆர்வமுடன் செவிமடுத்தனர். முன்பதிவு உட்பட ஆயிரம் பிரதிகள் விற்றுவிட்டதாக என்.சி.பி.எச். தெரிவித்துள்ளது.

**- மணிமாறன்**





**சேலம் மாநகரில் கூடுவோம்!**
**மக்களுக்கான தீர்மானங்களை நிறைவேற்றுவோம்!**
**நமது அரசியல் நிலைபாட்டை அறைகூவி பறைசாற்றுவோம்!**

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.